Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 தை 29 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 துல்ஹிஜ்ஜா 12 (12.02.2003) புதன்கிழமை இதழ் :133

English Academy
Email: thangan 672002 @ yahoo.com
T.P. - 021-2222588
210, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
பிரதான வீதி, சித்தன்கேணி.
Enrol your Children for Better results
சிறந்த பெறுபேற்றுக்கு
உங்கள் பிள்ளைகளை சேருங்கள்
(சி-561)



யாழ்.நூலகத்துக்கு வருகைதந்த பிரெஞ்சு இராஜாங்க அமைச்சர்.

## யாழ்.நகரின் பல பகுதிகளுக்கும் பிரெஞ்சுக் குழுவினர் விஜயம்

(யாழ்ப்பாணம்)

பிரெஞ் நாட்டு உயர்மட்டக்குழு ஒன்று நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்தது.

பிரான்ஸ் நாட்டின் பிரதி வெளிவிவகார அமைச்சர் றெனோ முசாலியர் மற்றும் இலங்கைக்கான பிரான்ஸ் நாட்டின் தூதுவர் , பிரான்ஸ் நாட்டின் ஆசியாவிற்கான சர்வதேசத் தொடர்பாளர் மேரி டயானா ஆகியோர் இக்குழுவில் இடம்பெற்றிருந்தனர்.

நேற்றுக்காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் வருகை தந்த மேற்படி தூதுக்குழுவினர், கச்சேரி வீதியில் அமைந்துள்ள யாழ்.மாநகரசபையின் பொது நூலகத்தில் யாழ். மாநகரசபை முதல்வர் தலைமையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டனர்.

இதன்போது புதிதாகத் திறக்கப்படவுள்ள யாழ். பொதுநூலகத்திற்குத் தேவையான ஒரு தொகுதி நூல்களை பிரெஞ்சு பிரதி வெளியுறவு அமைச்சர், யாழ். மாநகரசபை முதல்வர் கந்தையனிடம் கையளித்தார்

(10 ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



உடனடி உதவி எண்டது எங்கட அதிகாரிகளுக்கு குறைஞ்சது ஒரு வருஷக் கணக்கு பாத்தியளே...

# தெளிவற்ற அமைச்சரவைத் தீர்மானம்; மீள்குடியமர்வு கொடுப்பனவு தாமதம்!

## குடியமர்வுத் திகதியைத் தீர்மானிப்பதில் குழப்பம்

(யாழ்ப்பாணம்)

**வட - கிழக்குப் பகுதியில் உள்ள மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு மீளக்குடியமர்வுக்கான பணக்கொடுப்பனவு வழங்குவது தொடர்பான அமைச்சரவைத் தீர்மானம் தெளிவாக இல்லாததால் மேற்படி கொடுப்பனவு வழங்குவது தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.**

இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் மீண்டும் தமது சொந்த இடங்களுக்குச் சென்றதும் அவர்களுக்கு மீளக்குடி அமர்தல் கொடுப்பனவாக இருபத்தையாயிரம் ரூபா வழங்குவது என்று அமைச்சரவை ஏற்கனவே தீர்மானம் எடுத்திருந்தது.

இந்தத் தீர்மானத்தின் அடிப்படையில், கொடுப்பனவுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுவந்தன. இக்கொடுப்பனவை வழங்குவதற்காக நெதர்லாந்து அரசாங்கம் 117 மில்லியன் ரூபாவையும், உலக வங்கி 10 மில்லியன் அமெரிக்க டொலர்களையும் வட - கிழக்கு மாகாண சபைக்கு வழங்கியிருந்தது.

எனினும், கொடுப்பனவை மேற்கொள்ளும் விடயத்தில் மாகாண சபை உயர் அதிகாரிகளுக்கு தற்போது

(10 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். நூல் நிலையம் முன்பாக மாணவரும், மக்களும் மறியல்

### சர்வதேச தமிழீழ மாணவர்பேரவை அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பொதுநூலகத்தில் எவ்வித அடிப்படை வசதிகளும் செய்யப்படாத நிலையில் அதை அவசரமாகத் திறந்துவைக்க முற்பட்டால், அன்றையதினம் நூலகம் முன்பாக மாணவர்களும் மக்களும் இணைந்து மறியல் போராட்டம் நடாத்தவேண்டிவரும் என சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை அறிவித்துள்ளது. இது தொடர்பாக பேரவை வெளியிட்டுள்ள அறிக்கையில் -

நூல்கள் முழுமையாக கிடைக்கவில்லை, மின்விநியோகம் சீராக்கப்படவில்லை, கணினி மயப்படுத்தும் திட்டம் கைவிடப்பட்டுள்ளது. தண்ணீர்தாங்கி, லிப்ட் வசதிகள் செய்யப்படவில்லை(10 ஆம் பக்கம் பார்க்க)

## மீள்குடியமர்வு கொடுப்பனவு திட்டமிட்டு இழுத்தடிப்பு!

### தென்மராட்சி மக்கள் அரச அதிபருக்கு மகஜர்

இடம்பெயர்ந்த மக்களுக்கான மீள்குடியேற்ற கொடுப்பனவை வழங்குவதில் இழுத்தடிப்பு நடவடிக்கைகள் பின்பற்றப்பட்டு வருவது குறித்து தென்மராட்சி மக்கள் நலச்சேவைகள் சங்கம், யாழ்.அரச அதிபருக்கு மகஜர் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.

இக்கொடுப்பனவு வழங்குவதில் வேளைக்கு வேளை நடைமுறைகள் மாற்றப்படுவதும், மக்களை அலையவைப்பதும் வழமையான செயற்பாடாகிவிட்டது என அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (57)

## யசூஷி அகாஷி இலங்கையின் சர்வதேச விவகார ஆலோசகரா?

### பிரதமரிடம் விளக்கம் கோரி ஜனாதிபதி கடிதம்

இலங்கைக்கான ஜப்பானிய விசேட தூதுவர் யசூஷி அகாஷி, இலங்கையின் சர்வதேச விவகாரங்களுக்கான ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளாரா என கேள்வி எழுப்பியுள்ளார் ஜனாதிபதி சந்திரிகா.

இது தொடர்பாக விளக்கமளிக்குமாறு கோரி ஜனாதிபதி, பிரதமருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் கேட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம், இலங்கைக்கான ஜப்பானிய விசேட தூதுவராக கடமையாற்றி வரும் யசூஷி அகாஷியை இலங்கையின் சர்வதேச விவகாரங்களுக்கான ஆலோசகராக நியமித்திருப்பதாக தகவல் கிடைத்திருக்கின்றது என்றும், இவ்வாறு இவர் நியமிக்கப்பட்டிருப்பது எந்த அடிப்படையில் என்பது பற்றி தெளிவுபடுத்துமாறும் கோரி ஜனாதிபதி அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் கேட்கப்பட்டுள்ளது.

## நான்கு சிறுவர்கள் ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

புலிகள் இயக்கத்தில இணையச் சென்ற நான்கு சிறுவர்கள் நேற்று பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

நேற்று மாலை 4.30 மணியளவில் அரசியற்துறை நடுவப்பணியகத்தில் - யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழு பிரதிநிதி போல் எரிக், மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரி சந்திரசேகர, சிறுவர் பாதுகாப்பு நிதியப் பிரதிநிதி ஆகியோரின் முன்னிலையில் வைத்து இவர்கள், அவரவரது பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர். தொடர்ந்து யுனிசெப் பிரதிநிதி - சிறுவர்களின் பெற்றோருடன் கலந்துரையாடல் ஒன்றையும் நடத்தியமை குறிப்பிடத்தக்கது.

## அமைதி முயற்சியில் ஜனாதிபதி இரட்டை வேடமாம்

சமாதானம் பற்றி வெளிநாட்டுத் தலைவர்கள் முன்னிலையில் ஒரு நிலைப்பாட்டையும், உள்ளூரில் மற்றொரு நிலைப்பாட்டையும் ஜனாதிபதி கொண்டிருப்பது வருந்தத்தக்கது.

- இவ்வாறு அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் - ஜனாதிபதி முரண்பட்ட அறிக்கை

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மாரப்பனவை பதவி நீக்க ஜனாதிபதி எச்சரிக்கை

விடுதலைப் புலிகளைக் கையாள்வது தொடர்பாக தனது உத்தரவுகளை கவனத்தில் எடுக்காது செயறபடும் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவை பதவி நீக்க வேண்டி ஏற்படும் என ஜனாதிபதி சந்திரிகா எச்சரித்துள்ளார்.

நெடுந்தீவுச் சம்பவம் தொடர்பாக் பாதுகாப்பு அமைச்சும், அமைச்சர் திலக் மாரப்பனவும் மக்களுக்குப் பொய்யான தகவல்களை வழங்கியுள்ளதாக ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளார்.

புரிந்துணர்வு உடன்பாட்டை மீறும் புலிகளுக்கு எதிராக, நீண்ட காலமாகவே பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன நடவடிக்கை எடுக்காமல் இருந்து வந்துள்ளார். அத்துடன், ஜனாதிபதி என்ற வகையில் விடுக்கப்பட்ட உத்தரவுகளையும் அவர் நடைமுறைப்படுத்தவில்லை எனவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

(ரா)
உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003
ICC Cricket World Cup
இன்றைய ஆட்டங்கள்
தென்னாபிரிக்கா Vs கென்யா - North West Stadium, Potchefstroom
இந்தியா Vs நெதர்லாந்து - Boland Park, Paarl

SERENDIB AIRLINE
யாழ்ப்பாணத்தில் இருந்து வெள்ளவத்தை வரையும் அழையுங்கள்
021 - 2223916, 0777 - 517019
(சி -518) 01-505632, 074-612656, 01-390128

# அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் பொ.ஐ.மு. - ஜே.வி.பி. ஒரே சின்னத்தில்

(கொழும்பு)

அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணியும் ஜே.வி.பியும் இணைந்து ஒரே சின்னத்தில் போட்டியிடுவதெனத் தீமானிக் கப்பட்டிருப்பதாக பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினரான சரத் அமுனுகம தெரிவித்தார்.

அவர் மேலும் தகவல் வெளியிடுகையில், ஜே.வி.பிக்கும் பொ.ஐ.மு.வுகக்கும் இடையிலான பேச்சுக்களின் மூலம எடுக்கப்பட்ட முதலாவது முடிவு இது எனத் தெரிவித்தார்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்களும், பேராசிரியர்களும் நடத்திய ஆய்வு ஒன்றின் மூலம் பொ.ஐ.முவும், ஜே.வி.பியும் இணைந்து போட்டியிட்டால் நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெறமுடியும் எனத் தெரிய வந்திருப்பதாகவும் சரத் அமுனுகம மேலும் தெரிவித்தார்.

ஜே.வி.பிக்கும், பொ.ஐ.முவுக்கும் இடையில் உருவாகியுள்ள இத்தகைய உடன்பாடு குறித்து கூட்டணியிலுள்ள லங்கா சமசமாசக் கட்சியோ, கம்யூனிஸ்ட் கட்சியோ எந்தக் கருத்தையும் வெளியிடவில்லை.

இதேவேளை, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின கலகெதர தொகுதி அமைப்பாளராக சரத் அமுனுகமவை ஜனாதிபதி சந்திரிகா நியமித்துள்ளார்.

# மூன்று வருடங்களின் பின்னர் மறவன்புலோ அம்மனை வழிபட அனுமதி

(சரசாலை)

மறவன்புலோ வள்ளியம்மன் ஆலயத்தில் கடந்த மூன்று வருடங்களின் பின்னர் - மகாசிவராத்திரி தினத்தன்று பொதுமக்கள் சென்று வழிபாடு செய்ய பலாலி படைத்தலைமையகத்தினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

படையினரின் அதியுச்சப் பாதுகாப்பு வலயத்திலுள்ள இவ்வாலயத்திற்கு மக்கள் செல்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டதால், நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி பலாலி படைத்தலைமையகத்துடன் தொடர்பு கொண்டதையடுத்து ஆலய அறங்காவலரும், பூசகரும் தினமும் சென்று பூசைகள் செய்வதற்கு படையினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

# திருமலை தமிழர்களின் தாயகம்; ஆவணங்கள் சேகரிக்க ஏற்பாடு!

திருகோணமலை தமிழரின் தாயகப் பூமி என்பதை நிரூபிப்பதற்கான சான்றுகள், ஆவணங்கள், இலக்கியங்கள் பேணுவதற்கான ஆவணக் காப்பகம் ஒன்றை அமைப்பதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அண்மையில் திருகோணமல்யில் கூட்டமொன்று நடத்தப்பட்டது. இக்கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் திருமலை மாவட்ட ஆவணக் காப்பக பொறுப்பாளர் மலைமாறன், திருமலை அரசியல்துறைப் பொறுப்பாளர் திலக் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில், தமிழரின் பாரம்பரிய பூமியான திருகோணமலையை சிங்கள வரலாற்றாளர்கள் சிலர் சிங்களவரின் பூமி என திரிபுபடுத்தியுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

## மூன்று நூல்கள் குருகுலத்தில் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

அமரத்துவம் அடைந்த சுப்பிரமணிய சாஸ்திரியின் பிறந்தநாள் நினைவாக - சர்வதேச இந்து குருமார் ஒன்றியத்தினால் நேற்று முன்தினம் நூல் வெளியீடு செய்யப்பட்டது.

சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியத் தலைவர் மனோகரக் குருக்கள் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில்- பஞ்ச குண்ட பூஜா, நவ குண்ட பூஜா, விவித வித்தியா ஆகிய மூனறு நூல்களும் வெளியிட்டு வைக்கப்பட்டன.

# கணினிப் பயிற்சி நிலையம் முள்ளியவளையில் இயங்கும்

(கொழும்பு)

வன்னிப் புனர்வாழ்வு அமைச்சினால் முள்ளியவளையில் கணினிப் பயிற்சி நிலையம் ஒன்று ஆரம்பிக்கப் படவுள்ளது.

40 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ள இந்தக் கணினிப் பயிற்சி நிலையத்தை உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனமான தமிழ் தகவல் தொழில்நுட்பக் கழகத்துடன் இணைந்து வன்னிப் புனர்வாழ்வு அமைச்சு நடத்தவுள்ளது.

இந்தக் கணினிப் பயற்சி நிலையம் வெற்றிகரமாக இயங்கினால் வன்னிப் பகுதியில் மேலும் பல நிலையங்களைத் திறக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் ஆர்.தர்மகுலசிங்கம் தெரிவித்தார்.

-இக்கணினிப் பயிற்சி நிலையத்தில் பாடசாலையைவிட்டு விலகிய மாணவர்கள், ஆசிரியர்கள், உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.



நேற்று முன்தினம் புனர்வாழ்வு அமைச்சினால், தெல்லிப்பளை நீதிவான் அகதி முகாமிலுள்ள குடும்பங்களுக்கு சமையல்பாத்திரங்கள் அன்பளிப்பாக வழங்கப்பபட்டபோது எடுக்கப்பட்ட படம்.

# ஐந்து நாள் விஜயமாக அகாஷி வருகின்றார்

இலங்கைக்கான ஜப்பானிய விசேட சமாதானத் தூதுவர் ஜசூஷி அகாஷி இன்று கொழும்பு வருகின்றார்.

எதிர்வரும் சனிக்கிழமை வரை இலங்கையில் தங்கியிருக்கும் அகாஷி, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர்கள் மிலிந்த மொறகொட, ஜி.எல்.பீரிஸ் ஆகியோருடனும் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவுடனும் பேச்சுக்களை நடத்துவார்.

அத்துடன் இலங்கையில் தங்கியிருக்கும் போது இராஜதந்திரிகளுடனும் அகாஷி பேச்சுக்களை நடத்துவார் எனவும் தெரியவருகிறது.

## சுயதொழில் முயற்சிக் கடன்

(புலோலி)

பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள வறுமைக்கோட்டின் கீழுள்ள குடும்பங்களுக்குச் சுய தொழில் முயற்சிக் கடனாக 10 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது.

பொதுஜன மாதாந்த உதவிப் பணத்திட்டத்தின் கீழ் 9 பேருக்கும், அங்கவீனர் புனர்வாழ்வுத் திட்டத்தின் கீழ் 5 பேருக்குமாக - வடக்கு கிழக்கு சமூக நலத்துறை அமைச்சினால் இக்கடன் வழங்கப்படவுள்ளதாகப் பருத்தித்துறைப் பிரதேச செயலக சமூகசேவை உத்தியோகத்தர் என்.இராசலிங்கம் தெரிவித்துள்ளார். (15)

# சிவனொளிபாத மலைக்கு தனியான ஒரு தபாற்காரர்

சிவனொளிபாத மலையிலுள்ள கோவிலுக்கு மட்டும் தபால்களைக் கொண்டு செல்வதற்காகத் தினமும் ஒரு தபாற்காரர் சென்று வருகின்றார். இந்த தபாற்காரர் கோவிலுக்கான தபால்களை எடுத்துச் செல்வதற்காகத் தினமும் எட்டு மைல் தூரம் சென்று வருகிறார்.

இவருக்கு நாட்கூலி அடிப்படையிலேயே ஊதியம் வழங்கப்படுகின்றது. நாளொன்றுக்கு 30 ரூபா ஊதியம் இவருக்கு வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

## யாழ்.உதைபந்தாட்ட அணி கொழும்பு பயணம்

கொழும்பு, பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மைதானத் திறப்பு விழாவின் போது நடைபெறவுள்ள சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டியில் கலந்து கொள்வதற்காக யாழ்ப்பாணத்திலிருந்து 7 வீரர்களும் 3 உத்தியோகத்தர்களும் இன்று கொழும்பு செல்லவுள்ளனர்.

இலங்கை தேசிய உதைபந்தாட்ட அணியுடனான சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டியிலேயே யாழ்ப்பாண வீரர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

# திருமலையில் சமாதானத்தை வலியுறுத்தும் கலை விழா

## கலை பண்பாட்டுக்கழக ஏற்பாட்டில்

ஜப்பானில் சமாதானப் பேச்சுக்கள் நடைபெறவுள்ள மார்ச் 3 ஆம் திகதி முதல் 7 ஆம் திகதிவரை - திருமலையிலும் இசை, நடன, நாடக விழாவை நடத்த விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக்கழகம் ஏற்பாடு செய்துள்ளது. இத்தகவலை கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை திருமலையில் இடம் பெற்ற கூட்டத்தில் தெரிவித்தார்.

வட - கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்த கலைஞர்கள் பங்குபற்றும் இவ்விழாவின் முக்கிய நோக்கம் அமைதி முயற்சிகளை வலியுறுத்துவதும், சமாதானம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதுமென அவர் மேலும் தெரிவித்தார். இதற்கான ஏற்பாட்டுக் குழுக்களும் அமைக்கப் பட்டிருக்கின்றன.


## யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி 150 ஆவது ஆண்டு விழாச் சபை

### அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவு

(7.2.2003 அன்று நடத்தப்பட்டது)

| | |
|---|---|
| முதலாம் இடம்.... | 09457 |
| இரண்டாம் இடம்.... | 03217 |
| மூன்றாம் இடம்.... | 08299 |

ஆறுதல் பரிசுகள்

| | | | |
|---|---|---|---|
| 01.......... | 12420 | 06.......... | 09845 |
| 02.......... | 03096 | 07.......... | 01966 |
| 03.......... | 01069 | 08.......... | 02965 |
| 04.......... | 09466 | 09.......... | 13585 |
| 05.......... | 10876 | 10.......... | 11461 |

பரிசுகளை 28.02.2003 இற்கு முன்னர் பெற்றுக்கொள்ளவும்.

S.K.தங்கவடிவேல் (செயலாளர்), 150 ஆவது ஆண்டு விழாச் சபை

(சி-581)

## SASIREHA TRADING

## சசிரேகா ரேடிங் (மிக்ஷர் கடை)

தரமான மிக்ஷர், பிஸ்கட் வகைகள், ரொபிப் பைக்கற்றுக்கள், கன்டோஸ் வகைகள், சோடா வகைகள் (Cool) Elephant ஐஸ்கிறீம் வகைகள், பால்மா வகைகள், கேக் தயாரிக்கும் பொருட்கள், பாடசாலை உபகரணங்கள், அழகு சாதனங்கள், பிலிம் றோல், BATA, DSI மற்றும் அனைத்துப் பொருட்களும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

பருத்தித்துறை வீதி,
நல்லூர் சந்தை,
கல்வியங்காடு.

## நிறைஞ்சனாஸ் சங்கானை

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)

இன்றுமுதல் மாதவன், மீரா ஜஸ்மின் நடித்த

ரன்

வெள்ளி. சனி. ஞாயிறு இரவு 8.45 காட்சி

THE MUMMY RETURNS

(சி-544)

## ராஜா யாழ்ப்பாணம்.

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரே தினவெளியீடு

விஜய், ஸ்நேகா நடித்த

வசீகரா



10.30, 2.30, 6.00,9.30 (சி-545)

ரிக்கற்றுக்களை முன்பதிவு செய்துகொள்ளவும்.


## இன்றைய நாள் இனிய நாள்

12-02-2003 - புதன்கிழமை

| | |
|---|---|
| மேடம் | :- தேக ஆரோக்கியம், குடும்ப சுகம், பிரயாண சுகம், புதிய ஸ்தானம். |
| இடபம் | :- கோபமிகுதி, வாக்கு வசீகரம், காரிய சித்தி, இனசன கொண்டாட்டம். |
| மிதுனம் | :- நன்மதிப்பு, களஸ்திர சுகம், சௌபாக்கியம், சிநேகலாபம். |
| கர்க்கடகம் | :- ரோகபயம், மனக்கவலை, கெட்ட சகவாசம், தனித்த நிலை. |
| சிங்கம் | :- சத்துரு வெற்றி, வாகன யோகம், தருமகாரியம், தனதானிய லாபம். |
| கன்னி | :- களஸ்திர மகிழ்ச்சி, சோம்பல், தொழில் சிறப்பு, உயர்ந்தநிலை. |

பிரபல சோதிடர் எஸ்.குகநேசன்

| | |
|---|---|
| துலாம் | :- தேக மெலிவு, விபத்து, காரிய விக்கினம், கோபமிகுதி. |
| விருச்சிகம் | :- நன்மதிப்பு, காரிய வெற்றி, பிரயாணத்தால் நன்மை, தேகசுகம். |
| தனு | :- தனித்த நிலை, வாக்குக் கலகம், இனசன விரோதம், வீண்பழி. |
| மகரம் | :- ஆபரண லாபம், பிரயாணத்தால் நன்மை, அதிக பிரயாசை, நன்மதிப்பு. |
| கும்பம் | :- அவமானம், கீழ்ப்படிதல், சரீரசுகக் குறைவு, நேத்திர ரோகம். |
| மீனம் | :- வாக்கு வசீகரம், பிரயாசை மிகுதி, பெண்களால் நன்மை, இல்லச் சிறப்பு. |

# சுப்பிரமணியம் பூங்காவில் படைத்தளம் அமைக்க முயற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரை அண்டிய பகுதியான பொதுநூலகத்திற்கு அருகிலுள்ள சுப்பிரமணியம் பூங்கா உள்ளிட்ட பகுதியில் இராணுவத்தளம் அமைக்கப் படையினர் முயற்சிகளை மேற்கொண்டிருப்பதாகத் தெரியவருகிறது.

சுப்பிரமணியம் பூங்கா, நகர மண்டபத்திற்கு ஒதுக்கப்பட்ட இடம், வாடி வீட்டிற்கு ஒதுக்கப்பட்ட இடம் ஆகிய இடங்களை உள்ளடக்கிய பிரதேசத்தை இராணுவத் தளமாக மாற்றியமைப்பதற்கு இராணுவத்தினர் முயன்றுவருவதாகத் தெரிய வருகிறது.

யாழ்.மாநகரசபைக்குச் சொந்தமான இவ்விடத்தை இராணுவத் தளமாக்குவதற்காகத் தரும்படி அடிக்கடி இராணுவத்தினர் கோரிவருவதாகவும், மாநகரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்.நகரப் பகுதியிலிருந்து படையினரை வெளியேற்றி சுப்பிரமணியம் பூங்கா பகுதியில் நிலைகொள்ளச் செய்ய படைத்தரப்பு திட்டமிடுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(ரா)

# புலிகளின் ஆயுதக் கொள்வனவு; பேச்சுக்களில் அவசியமில்லை!

## பேணாட் குணதிலக அறிவிப்பு

'விடுதலைப்புலிகள் ஆயுதங்களைக் கொள்வனவு செய்வது தொடர்பாக சமாதானப் பேச்சுவார்த்தைகளின்போது ஆராயப்படவேண்டிய அவசியமில்லை' - இவ்வாறு அரசாங்க சமாதானச் செயலகத்தின் பணிப்பாளர் நாயகமான பேணாட் குணதிலக தெரிவித்துள்ளார்.

பேர்ளினில் நடைபெற்ற சமாதானப் பேச்சுவார்த்தைகளையடுத்து நாடு திரும்பும்போது ஊடகவியலாளர்களுடன் பேசும்போதே பேணாட் குணதிலக மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-புலிகள் ஆயுதங்களைக் கடத்துகின்ற சந்தர்ப்பங்களில் நடவடிக்கை எடுப்பதற்கு இலங்கைக் கடற்படையினருக்கு யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் போதிய அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன என்றும் குறிப்பிட்டார்.

# உடல் மருத்துவபீடத்திற்கு அரசியல் கைதி கோரிக்கை

(கொழும்பு)

நான் மரணித்தால் எனது உடலை ஐ.சி.ஆர்.சி. மூலம், மூவினங்களைச் சேர்ந்த மாணவர்கள் படிக்கும் பல்கலைக்கழக மருத்துவபீடத்துக்குக் கையளிக்கவும்.

இவ்வாறு களுத்துறை சிறைச்சாலை சுவர் மீது ஏறி உண்ணாவிரதம் இருந்துவரும் கண்ணன் செல்வரஞ்சன் என்ற இளைஞனே மேற்கண்ட கோரிக்கையை விடுத்துள்ளார்.

இம்மாதம் முதலாம் திகதியில் இருந்து சிறைச்சாலை கூரை மீதேறி கொளுத்தும் வெயிலிலும் போராட்டத்தினை நடாத்திவரும் இவ்விளைஞர் வெப்பம் தாங்க முடியாது மயங்கி வீழ்ந்தார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

வைத்தியப் பரிசோதனைக்கு உட்படுத்த மறுத்து வரும் இவர், தனது விடுதலை கிடைக்கும்வரை போராட்டத்தைக் கைவிடப்போவதில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

(க)

# ஐ.தே.கவுடன் இணைந்து பணியாற்ற முடியாதுள்ளது!

## என்கிறார் சந்திரிகா

(கொழும்பு)

ஐ.தே.கட்சியில் முன்னர் நல்ல தலைவர்கள் இருந்தனர். ஆனால் இப்போது அத்தகைய நல்ல தலைவர்கள் கிடையாது. இவர்களுடன் இணைந்து அரசாங்கத்தை நடத்துவது கடினமானதாகவுள்ளது எனத் தெரிவித்திருக்கிறார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

அவர் மேலும் தெரிவிக்கையில், முன்னர் ஐ.தே. கட்சியில் டி.எஸ். சேனநாயக்கா, டட்லி சேனநாயக்கா போன்ற நல்ல தலைவர்கள் இருந்தனர். இப்போது இத்தகைய நல்ல தலைவர்கள் இல்லை.

ஐ.தே.கட்சி அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்றுவது ஆபத்தானது. அவர்களின் செயற்பாடுகளுடன் என்னால் இணங்கிப்போக முடியவில்லை.



பல்வேறு வழிவகைகளின் மூலம் அரசாங்கம் என்னைப் பணிய வைக்க முயற்சிக்கின்றது. அதற்கு நான் இடம் கொடுக்கமாட்டேன். இனி வரும் காலங்களில் ஐ.தே.கட்சியுடன் இணைந்து பணியாற்றுவது மிகவும் கடினமான காரியமாகவே இருக்கும் எனவும் ஜனாதிபதி சந்திரிகா மேலும் தெரிவித்தார்.

# இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சி பிரான்ஸ் முழு ஆதரவு வழங்கும்!

இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிக்குப் பிரான்ஸ் அரசாங்கம் முழுமையான ஆதரவை வழங்கும் என்று பிரான்ஸ் பிரதி வெளியுறவு அமைச்சர் றேனோ முசாலியர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் செய்தியாளர்கள் மத்தியில் பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் -

இலங்கையில் புனர்வாழ்வு, புனர்நிர்மாணப் பணிகளுக்கு உதவ பிரான்ஸ் தயாராகவே இருக்கின்றது. அத்துடன், இலங்கையுடன் நெருங்கிய பொருளாதார உறவுகளை ஏற்படுத்தவும் பிரான்ஸ் விரும்புவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

பிரான்ஸின் பிரதி வெளிவிவகார அமைச்சர் றேனோ முசாலியர்- ஜனாதிபதி சந்திரிகா, பிரதமர் ரணில விக்கிரமசிங்க ஆகியோரைச் சந்தித்துப் பேச்சு நடத்திய பின்னரே அவர் இக்கருத்தை வெளியிட்டார்.

(01)

# உயர் பாதுகாப்பு வலய விவகாரம் முடிவு எடுக்கக் காலம் செல்லும்!

## சதீஸ் நம்பியார் கருத்து

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டு பாதுகாப்பு வலயம் குறித்து முடிவுசெய்ய காலம் எடுக்கும். இது ஒரு தீவிரமான விடயம் என இந்திய இராணுவத்தின் ஓய்வுபெற்ற அதிகாரியும், அண்மையில் யாழ். வந்து உயர் பாதுகாப்பு வலயங்கள் குறித்து ஆராய்ந்தவருமான மேஜர் ஜெனரல் சதீஸ் நம்பியார் பி.பி.ஸிக்குத் தெரிவித்துள்ளார்.

புதுடெல்கியில் வைத்து இக்கருத்தை வெளியிட்ட அவர், தனது இறுதி அறிக்கையை சமர்ப்பிப்பது குறித்து ஆலோசித்து வருவதாகவும், மீண்டும் இலங்கை செல்ல திட்டமிட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

(லி)

# அரச ஊழியர் இடமாற்றம் புதிய திட்டம் விரைவில்!

## பொது நிர்வாக அமைச்சர் தகவல்

(கொழும்பு)

அரசாங்க ஊழியர்களுக்கான புதிய இடமாற்றத்திட்டம் ஒன்றை அரசாங்கம் விரைவில் நடைமுறைப் படுத்தவுள்ளதாகப் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

இப்போது நடைமுறையிலுள்ள ஊழியர் இடமாற்றத்திட்டம் நியாயப்பாடுகளற்றது. இது இடமாற்றம் கோரும் ஊழியர்களுக்கு அதிக ஆதாயமற்றதாக உள்ளது.

இதனாலேயே அரசாங்கம், ஊழியர்களின் நலனை முதன்மைப்படுத்துகின்ற வகையிலான இடமாற்றத்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தத் தீர்மானித்துள்ளது.

இந்த இடமாற்றத்திட்டம் இவ்வருடமே அமுலாக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(க)

## கலந்துரையாடல்

(உடுத்துறை)

வடமராட்சி கிழக்குப் பகுதியிலுள்ள கடற்தொழிலாளர்களில் கரைவலை வைத்திருப்போருக்கான கரைவலைப்பாடு வழங்குவது தொடர்பான கலந்துரையாடலொன்று 15 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு வடமராட்சி கிழக்குக் கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கச் சமாச அலுவலகத்தில் நடைபெறும்.

(117)

# வடமராட்சி கிழக்குப் பகுதியிலிருந்து புலிகள் மாலை 4 மணிக்கு முன்னர் திரும்பவேண்டும்

## படையினர் கெடுபிடி

(சரசாலை)

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் உள்ள அம்பன், குடத்தனை, மணற்காடு ஆகிய இடங்களுக்கு வரும் விடுதலைப் புலிகள் மாலை 4 மணிக்கு முன் அங்கிருந்து திரும்பிவிட வேண்டுமெனப் படையினர் வலியுறுத்தியுள்ளனர்.

இதேவேளை, விடுதலைப் புலிகள் இப்பகுதிகளில் தங்கவேண்டிய அவசியமேற்படின், அவர்கள் தங்கும் வீட்டு உரிமையாளரின் பெயர் விபரங்களைப் படையினரின் முகாம்களில் பதிவு செய்யுமாறும் கோரியுள்ளனர்.

மேலும், விடுதலைப் புலிப் போராளிகள் சென்றுவரும் வீடுகளின் விபரங்களையும் படையினர் திரட்டி வருகின்றனர். இப்பகுதியில் இரவுவேளை குடியிருப்புக்கு அருகே பதுங்கியிருந்த படையினர் இருவரை மக்கள் பிடித்ததை அடுத்து படையினர் கடுமையான போக்கைக் கடைப்பிடித்து வருகின்றனர்.

தென்மராட்சிப் பிரதேசத்திலும்- படையினர் - போராளி, மாவீரர்களின் குடும்ப விபரங்களைத் திரட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (34)

## கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு சிறுப்புலம் ஸ்ரீசுப்பிரமணிய தேவஸ்தான பாலஸ்தான கும்பாபிஷேகம் இன்று சிவஸ்ரீ.நா. யோகேஸ்வரக்குருக்கள் தலைமையில் நடைபெறும்.

(ச)



யாழ்ப்பாணத்திற்கு நேற்று வருகை தந்த பிரான்ஸ் நாட்டுப் பிரதி வெளிவிவகார அமைச்சர் றேனோ முசாலியர் யாழ். பொது நூலகத்துக்கு நூல்களை அன்பளிப்புச் செய்வதை முதலாவது படத்திலும், அல்லைப்பிட்டியில் வீடமைப்புத் திட்ட அடிக்கல் நாட்டு வைபவத்தில் கலந்துகொண்டு மங்கள விளக்கேற்றுவதை இரண்டாவது படத்திலும், இந்நிகழ்வில் கலந்துகொண்ட பிரமுகர்களை மூன்றாவது படத்திலும் காணலாம்.

(படங்கள்: லிவிங்ஸ்டன், ராஜ்குமார்)

# விவசாயக் கடன்களை வழங்கிவரும் பொருண்மிய மேம்பாட்டு கிராமிய வங்கி

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனக் கிராமிய அபிவிருத்தி வங்கி - விவசாயிகளுக்கு விவசாயக் கடன்களை வழங்கி வருகின்றது.

இத்திட்டத்திற்கமைய 2002, 2003 ஆம் ஆண்டுகளில் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள 465 விவசாயக் குடும்பங்களுக்கு 46 லட்சத்து 19 ஆயிரம் ரூபாவைக் கடன் தொகையாக வழங்கியுள்ளது.

இக்கிராமிய வங்கியூடாக முல்லைத்தீவு மாவட்டத்தில் 105 குடும்பங்களுக்கு - 11 லட்சத்து 68 ஆயிரம் ரூபாவும், கிளிநொச்சி மாவட்டத்தில் 264 குடும்பங்களுக்கு - 29 லட்சத்து 39 ஆயிரம் ரூபாவும், மன்னார் மாவட்டத்தில் 27 குடும்பங்களுக்கு- 3 லட்சத்து 7 ஆயிரம் ரூபாவும், வவுனியா மாவட்டத்தில் 16 குடும்பங்களுக்கு- 2 லட்சத்து 5 ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட்டுள்ளது.

இக்கடன்கள் விவசாய உபகரணங்கள் மற்றும் உள்ளீடுகள் என்பன கொள்வனவு செய்வதற்காக வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (34)

# புலிகளின் குரல் வானொலி மன்றங்களின் பொதுக்கூட்டங்கள் வன்னிப்பகுதியில்

புலிகளின் குரல் வானொலியில் "வானொலி மன்றங்களின் இவ்வருடத்திற்கான பொதுக்கூட்டமும் நிர்வாகிகள் தெரிவும்" இன்றுமுதல் வன்னிப் பிரதேசத்தின் பல்வேறு பகுதிகளிலும் நடைபெறவுள்ளது.

கிளிநொச்சியில் இன்று 3.30 மணிக்கு கிளிநொச்சி மகா வித்தியாலயத்திலும்,

முள்ளியவளையில் 14 ஆம் திகதி பி.ப. 3.30 மணிக்கு வித்தியானந்தா கல்லூரியிலும்,

புதுக்குடியிருப்பில் 16 ஆம் திகதி பி.ப. 3 மணிக்கு ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயத்திலும்,

மல்லாவியில் 17 ஆம் திகதி பி.ப. 3.30 மணிக்கு யோகபுரம் மகா வித்தியாலயத்திலும்,

அக்கராயனில் 18 ஆம் திகதி பி.ப. 3.30 மணிக்கு ஸ்கந்தபுரம் இலக்கம் 1 அரசினர் தமிழ் கலவன் பாடசாலையிலும,

விசுவமடுவில் 19 ஆம் திகதி பி.ப. 3.30 மணிக்கு விசுவமடு மகா வித்தியாலயத்திலும் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

வானொலி மன்றத்தில் இணைந்து கொள்ள விரும்பும் கலைஞர்கள், ரசிகர்கள், ஆர்வலர்கள், நலன்விரும்பிகள், எழுத்தாளர்கள் நடைபெறவிருக்கும் இடங்களுக்கு வருகை தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

## நூல் வெளியீடு

மட்டுவில் இலக்கியகலாநிதி சி. கணபதிப்பிள்ளை மீது பாடப்பட்ட "பண்டிதமணி நான்மணிமாலை" நூல் வெளியீட்டு விழா இன்று பி.ப. 3 மணிக்கு நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் சைவப்புலவர் சு.செல்லத்துரை தலைமையில் நடைபெறவுள்ளது.

## மெய்வல்லுநர் போட்டி

(இளவாலை)

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியும், இளவாலை திருக்குடும்ப கன்னியர்மடம் மகா வித்தியாலயமும் இணைந்து நடாத்தும் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 15 ஆம் திகதி பி.ப. 1.30 மணிக்கு ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்குப் பிரதம விருந்தினராகக் கல்லூரியின் பழைய மாணவனும், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமாகிய செல்வம் அடைக்கலநாதன் கலந்துகொள்ளவுள்ளார். (41)

## கைதடி சைவச்சிறார் இல்லத்தில்

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்து சமயப் பேரவையின் கைதடி சைவச் சிறுவர் இல்ல ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத தில்லை நடராஜப் பெருமான் ஆலய விஷேட திரய சங்காபிஷேகமும் - அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினரின் அனுசரணையுடன் ஏகதினப் பன்னிரு திருமுறைப் பாராயணமும் எதிர்வரும் 15 ஆம் திகதி சனிக்கிழமை காலை 6 மணி தொடக்கம் நடைபெறவுள்ளது.

## அரங்கேற்றம்

(யாழ்ப்பாணம்)

செல்வி சோபனா நந்தகுமாரின் பரதநாட்டிய அரங்கேற்றம் இன்று காலை 9.30 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## பாதீனியத்தை அழிக்க களைகொல்லி விநியோகம்

(ஊரெழு)

மிக வேகமாக வளர்ந்துவரும் பாதீனியத்தை அழிப்பதற்குக் கமநல சேவைகள் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகிறது.

இதற்காகப் பிரதேசரீதியாக விவசாய சம்மேளனங்களுக்கு 3 லீற்றர் களைநாசினி இலவசமாக வழங்கப்பட்டுவருகிறது. இது சுமார் 5 ஏக்கர் பரப்பளவிலுள்ள பார்தீனியத்தை அழிப்பதற்குப் போதுமானதாகும். (96)

# நீரிழிவு நோய் DIABETES

பகுதி 17 - ச.ஆ.கோபாலமூர்த்தி.

சீனி சேர்க்காத தேநீரை விரும்பிய அளவில் விரும்பிய நேரம் அருந்தலாம். பால் அருந்தும்போது ஆடை நீக்கிய பாலை அருந்த வேண்டும். விலங்குகளின் சிகப்பு இறைச்சிக்குப் பதிலாக மீன் அல்லது கோழி இறைச்சியை நுகர்தல் நன்று. வைத்தியரின் ஆலோசனைக்கு அமைவாக நன்குகனியாத பழங்களை அளவுடன் உண்ணலாம்.

### முற்றாகத் தவிர்க்கவேண்டிய உணவுகள், பானங்கள்

சீனி, குளுக்கோஸ், சர்க்கரை, பனங்கட்டி, கல்லாக்காரம், கற்கண்டு, பாணிகள், தேன், இனிப்பூட்டிய பானங்கள், கேக், ஹோர்லிக்ஸ், நெஸ்ரோமோல்ற், வீவா, மைலோ, புறோற்றினெக்ஸ், சொக்கலேற், ரொபி, இனிப்புக்கள், பழப்பாணி, பழச்சாறு, பழக்கூழ் என்பவையே தவிர்க்கப்படவேண்டியவை. பழங்களில் இருக்கும் புறுற்றோஸ் (FRUCTOSE) குளுக்கோசாக மாற்றப்படுவதற்குக் காலஅவகாசம் தேவைப்படுவதால், குளுக்கோஸாக மாற்றமடைந்து குருதியில் கலப்பது தாமதமாக இடம்பெறும். எனவே பழச்சாறுகளைவிடப் பழங்கள் சிறந்தவை.

தோல், விதை என்பவற்றுடன் சேர்த்து உண்ணப்படும் பழங்கள் உத்தம கனிகள் எனப்படும். உதாரணம் - கொய்யாப்பழம். தோல் அல்லது விதை ஏதாவது ஒன்றுடன் உண்ணப்படும் பழங்கள் மத்திம கனிகள் எனப்படும். உதாரணம் - வாழைப்பழம். தோல், விதை இரண்டையும் நீக்கியபின் உண்ணப்படும் கனிகள் அதம கனிகள் எனப்படும். உதாரணம்- மாம்பழம், பலாப்பழம். இவற்றுள், உத்தம கனிகள் மலச்சிக்கலைப் போக்கும் திறன்மிக்கவை. எனவே, உணவு வேளைகளுக்கிடையில் பழத்தைப் புசிக்கலாம் என வைத்தியர் கூறினால், உத்தம கனி ஒன்றை உண்பது சாலச்சிறந்தது. கறிசமைக்கும்போது தேங்காய்ப்பாலைக் குறைத்தல் நன்று. மஞ்சள் பருப்பைச் சமைப்பதற்குத் தேங்காய்ப்பால் பயன்படுத்தத் தேவையில்லை. தண்ணீரில் பருப்பை அவித்தல் போதுமானது. பொரிக்கும்போது ஒரே எண்ணெயைத் தொடர்ந்து பயன்படுத்தினால் எண்ணெயின் செறிவு அதிகரித்து அதனால் ஏற்படும் தீங்கு மிகும். எனவே, பொரிப்பதற்குப் புதிய எண்ணெயைப் பயன்படுத்துதல் நன்று.

### உயரத்துக்கு ஏற்ற நிறை நிர்வாகம்

அதிக பருமானவர்கள் அதிக நிறையுடையவர்களாக இருப்பர். மிகுபருமன் நிலை (OBESITY)யில் இருப்போரது இரத்தக் குழாய்களிலிருந்து உடற்கலங்களுக்குள் குளுக்கோஸ் செல்வதில் இடையூறு ஏற்படும். குளுக்கோஸ் கலங்களுட் செல்வதற்கு இன்சுலினின் துணை அவசியமானதாகும். இன்சுலின் உயிர்ப்புடன் செயற்பட்டுக் கலங்களுக்குள் குளுக்கோஸ் செல்வதற்கு வழிவகுத்தால்தான், கலங்களுக்குள் குளுக்கோஸ் சென்று சத்தியாக மாற்றப்படும். மிகு பருமனானவர்களது உடலில் போதிய இன்சுலின் இருந்தாலும், கலங்களுக்குள் குளுக்கோஸை உட்செலுத்தும் அதன் தொழிலை உயிர்ப்பாகச் செய்வதற்குக் கலங்கள் ஒத்து ழைக்கா. இதனால் கலங்கள் குளுக்கோஸ் பசியினால் (GLUCOSE ST-ARVATION) வாடும். இந்த நிலை வாய்க்காலில் போதிய நீர் இருக்கும் போது வரம்பை வெட்டி வயலுள் நீர் பாய்ச்சாதபோது பயிர்கள் நீரின்றி வாடி வதங்குவதை நிகர்க்கும். குருதியை வந்தடைந்த குளுக்கோஸ் கலங்களுக்குள் செல்லஇயலாது இருப்பதனால் இரத்தத்தில் குளுக்கோஸின் அளவு அதிகரிக்கும். இந்த நிலையைத் தவிர்ப்பதற்கு ஒவ்வொருவரும் தமது உயரத்திற்கு ஏற்ற நிறையைப் பேணவேண்டும். ஒருவர் தாம் மிகு பருமனானவரா இல்லையா என்பதை அறிந்துகொள்வதற்கு உலக சுகாதார நிறுவனம் BODY MASS INDEX உடல் எடைச் சுட்டெண்ணைக் கணித்து அறிய வேண்டும் எனக் கூறியுள்ளது. *(தொடரும்)*




நமது ஈழநாடு வழங்கும்





உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003

MEGA பரிசுப் போட்டி

முதற்பரிசு - 25,000

வழங்குவோர்: இரத்தினம்ஸ்

[இரத்தின கோபால்ஸின் இணைந்த நிறுவனம்]

30, சிறாம்பியடி ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

அசோசியேட்டட் மோட்டார் வேய்ஸின் (AMW) அங்கீகரிக்கப்பட்ட யமஃகா, மோட்டார் சைக்கிள்கள், வெளி இணைப்பு இயந்திரங்களின் யாழ்ப்பாண விற்பனை முகவர்.

இரண்டாம் பரிசு - 15,000

வழங்குவோர்: 1. ஜொனெக்ஸ் மல்ரி பலஸ்

YONEX MULTI PALACE

விளையாட்டு உபகரண விற்பனையாளர்கள்.

76, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



2. SAMUDRA TRADES LTD

3/2 ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். தொ.பே. 222 2938

டீசல் என்ஜின், நெல் குற்றும், மா அரைக்கும், இயந்திரங்கள் உதிரிப்பாக விற்பனையாளர்கள்.

மூன்றாம் பரிசு - 10,000

வழங்குவோர்: சந்தியா மல்ரிகோப்பரட்

531, பருத்தித்துறை வீதி, நல்லூர், பிரதான வீதி, பண்டத்தரிப்பு

Fancy goods, gift items, fevicryl & acron paint items.



இன்னும் ஏராளமான ஆறுதல் பரிசுகள்!
வினாக்கொத்துக்கு விடை தந்து பரிசுகளை
அள்ளிச் செல்லுங்கள்!!

உலகக் கிண்ண கிரிக்கெட் - 2003

வெல்லுங்கள்...! அள்ளுங்கள்...!

உலகக் கிண்ணக் கிரிக்கெட் பற்றிய வினாக்களுக்கு விடை தந்து பணப்பரிசுகளை, வெகுமதிகளை உங்களதாக்குங்கள்.

1. உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி 1975 இல் முதன் முதலாக எந்த நாட்டில் நடைபெற்றது? (....................)
2. இரண்டு முறை தொடர்ச்சியாக உலகக் கிண்ணத்தை வென்று மூன்றாவது முறையாக வெல்லும் வாய்ப்பை இழந்த அணி எது? (....................)
3. 2003 ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டிகள் எந்தெந்த நாடுகளில் நடைபெறப்போகின்றன? (....................)
4. 2003 உலகக் கிண்ணப் போட்டிகளில் ஆட்டத்தொடர் நாயகனாக (MAN OF THE SERIES) விளங்கப்போகும் வீரன் யார்? (....................)
5. 2003 உலகக் கிண்ணத்தை வெற்றி கொள்ளப்போகும் அணி யாது? (....................)

பூர்த்தி செய்துவிட்டீர்களா...? இது போன்ற ஐந்து கூப்பன்களை ஒரே வகையில் பூர்த்தி செய்து, எதிர்வரும் மார்ச் 06 ஆம் திகதிக்கு முன்பாக -

'உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003'
நமது ஈழநாடு,
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்குத் தபாலிலோ, நேரிலோ அனுப்பி வையுங்கள்.

பெயர்: ----------------------------------------
வயது: ----------------------------------------
முகவரி: ----------------------------------------
----------------------------------------



*சரியான விடைகளை எழுதுபவர்களிலிருந்து அதிர்ஷ்டசாலிகள் தேர்ந்தெடுக்கப்படுவர்.*

*போட்டி முடிவுகள் மார்ச் 28 ஆம் திகதியன்று 'நமது ஈழநாடு' பத்திரிகையில் வெளியாகும்.*

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை

## தோற்றும் மாணவர்களுக்கான முன் ஆயத்தப் பயிற்சிகள்





# மாணவர் மலர்



### வினாப்பத்திரம் 11

### தாய்மொழி - தமிழ்

✷ கீழே தரப்பட்டுள்ள பந்தியை வாசித்து வினாக்களுக்கான விடைகளை எழுதுக.

கோகுலம் ஆரம்பப் பாடசாலையின் மாணவனான இந்திரன் கெட்டிக்காரச் சிறுவன். 10 வயதுடைய அவன் ஐந்தாம் தரத்தில் கல்வி கற்கின்றான். குடும்பத்தில் மூத்தவனான அவனுக்கு ஆனந்தி என்னும் சகோதரியும், ஆனந்தன் என்னும் சகோதரனும் உள்ளனர். சித்தார்த்தன் என்ற பெயருடைய அவனுடைய அப்பா ஒரு விவசாயி. மாலினி என்ற பெயருடைய அவனது அம்மா வீட்டு வேலைகள் செய்வதிலும், பிள்ளைகளைப் பராமரிப்பதிலும் முழு நாளையும் செலவழிப்பார்.

இப்பந்தியில் பிரதான நபர் பற்றிய விபரங்களைத் தரப்பட்டுள்ள சுயவிபரப்படிவத்தில் எழுதி நிரப்புக.

சுயவிபரப்படிவம்

1. முழுப்பெயர் : ........................................
2. வயது :........................................
3. தந்தையின் பெயர் :........................................
4. தந்தையின் தொழில் :........................................
5. தாயின் பெயர் :........................................
6. தாயின் தொழில் :........................................
7. குடும்பத்திலுள்ள பிள்ளைகளின் எண்ணிக்கை:-..............................

#### ஆங்கிலம்

✷ கீழே தரப்பட்டுள்ள ஒவ்வோர் ஆங்கிலச் சொல்லுக்கும் பொருத்தமான தமிழ்ச் சொல்லை மேலுள்ள பந்தியிலிருந்து தெரிந்து புள்ளிக்கோட்டில் எழுதுக.

1. CHILD ..............................
2. FARMER ..............................
3. GRADE ..............................
4. CLEVER ..............................

#### சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்

✷ உணவு அசுத்தமடையும் படிமுறை தொடர்பான கூற்றுக்கள் சில கீழே தரப்பட்டுள்ளன. சரியான ஒழுங்கினைக் கவனித்து அதற்கு ஏற்ப ஒவ்வொரு கூற்றின் எதிரிலும் உள்ள கூட்டில் 2 இலிருந்து 6 வரை இலக்கங்களை எழுதுக. (உங்களுக்காக இல 1 குறிப்பிடப்பட்டுள்ளது.)

✦ ஈக்கள் உணவில் அமருகின்றன. [ ]

✦ அசுத்தமான உணவை உண்பதனால் கிருமிகள் உடம்பில் சேருகின்றன. [ ]

✦ குப்பை கூளங்களினால் ஈக்கள் பெருகுகின்றன. [ ]

✦ சிலர் வீடுகளின் அருகில் குப்பை கூளங்களைக் குவித்துவைக்கின்றனர். [ 1 ]

✦ உடலினுள் கிருமிகள் செல்வதால் வயிற்றுவலி ஏற்படுகின்றது. [ ]

✦ ஈக்களின் காலில் இருக்கும் அசுத்தங்கள் உணவில் சேருகின்றன. [ ]

#### கணிதம்

✷ பொன் நகர்ப் பாடசாலை மாணவர்கள் அண்மையில் கல்விச் சுற்றுலா சென்றனர். அப்போது அவர்கள் அன்பகம், அருளகம் என்னும் இரு சிறுவர் இல்லங்களுக்குச் சென்று, அங்கிருந்த பிள்ளைகளுக்கு அன்பளிப்புகள் வழங்கினர். இது தொடர்பாகக் கீழே தரப்பட்டுள்ள விவரங்களைப் படித்து வினாக்களுக்குரிய விடையைத் தருக.

| தரம் | பங்குபற்றியோர் | |
|---|---|---|
| | பெண்பிள்ளைகள் | ஆண்பிள்ளைகள் |
| 3 | 18 | 36 |
| 4 | 16 | 30 |
| 5 | 09 | 24 |

1. சுற்றுலாவில் பங்குபற்றிய தரம் 3 பிள்ளைகளின் மொத்த எண்ணிக்கை யாது? (..................)
2. சுற்றுலாவில் பங்குபற்றிய பெண்பிள்ளைகளின் மொத்த எண்ணிக்கை யாது? (..................)
3. அதிக பிள்ளைகள் பங்குபற்றியது தரம் 4 இலிருந்தா? தரம் 5 இலிருந்தா? (..................)
4. ஆண்பிள்ளைகளுக்கும் பெண்பிள்ளைகளுக்கும் இடையிலுள்ள வித்தியாசம் ஆகக்குறைவாக இருக்கும் தரம் எது? (..................)
5. சுற்றுலாவுக்காக ஒரு பிள்ளையிடம் இருந்து பெறப்பட்ட பணம் ரூ. 50 எனில், தரம் 5 ஆண்பிள்ளைகளிடமிருந்து பெறப்பட்ட மொத்தப் பணம் எவ்வளவு? (ரூபாய்..........)
6. சிறுவர் இல்லங்களின் பிள்ளைகளுக்கு வழங்குவதற்கு 432 அப்பியாசக் கொப்பிகள் சேர்க்கப்பட்டன. இவை ஒரு பொதியில் 4 கொப்பிகள் வீதம் பொதிகளாகக் கட்டப்பட்டன. இவ்வாறு கட்டப்பட்ட பொதிகளின் எண்ணிக்கை யாது? (..................)
7. பொன்நகர்ப் பாடசாலைக்கும், அன்பகம் சிறுவர் இல்லத்திற்கும் இடையேயுள்ள தூரம் 20 கிலோமீற்றர் 700 மீற்றரும் இதிலிருந்து அருளகத்திற்கு உரிய தூரம் 5 கிலோமீற்றர் 800 மீற்றரும் ஆகும். பொன்நகர்ப் பாடசாலைக்கும் அருளகத்திற்கும் இடையே உள்ள மொத்தத் தூரம் எவ்வளவு (......கிலோமிற்றர்.......மீற்றர்)
8. சுற்றுலாவில் பங்கு பற்றிய பிள்ளைகளின் எண்ணிக்கை 133. சுற்றுலாவுக்கு ஒழுங்கு படுத்திய பஸ்கள் ஒவ்வொன்றிலும் 40 பிள்ளைகளை மட்டுமே ஏற்றிச் செல்லலாம். சுற்றுலாவுக்காக ஒழுங்குபடுத்திய பஸ்களின் எண்ணிக்கை யாது? (..................)

#### சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் (விஞ்ஞானம்)

✷ மாணவன் ஒருவன் விளையாட்டு உபகரணம் ஒன்றைச்செய்து, அதனைச் செய்த முறையினை வாக்கியங்களில் எழுதினான். கீழே அவ்வாக்கியங்கள் ஒழுங்கின்றித் தரப்பட்டுள்ளன. வாக்கியங்களின் திருத்தமான படிமுறை ஒழுங்கினை இனங்கண்டு இதற்கேற்ப 1 முதல் 5 வரையான இலக்கங்களைக் கூடுகளில் எழுதுக.

✦ ஒரு அந்தத்தினைத் திசுக்களினால் மூடிச் சுற்றுக. [ ]

✦ மூன்று தள ஆடிக் கீலங்களை எடுத்துக்கொள்க. [ ]

✦ ஓர் அரியம் உண்டாகுமாறு தள ஆடிக் கீலங்கள் மூன்றையும் வைத்துக்கொள்க. [ ]

✦ இறுதி அரியத்தைத் தாளினால் மூடிச் சுற்றுக. [ ]

✦ மற்றைய அந்தத்தின் ஊடாகப் பல்வேறுபட்ட வர்ணமுடைய சிறு கட்டிகள் சிலவற்றை இட்டு, ஊடுகாட்டும் பொலித்தீன் தாளினால் மூடிவிடுக. [ ]

கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக

1. மேலே அவன் செய்த உபகரணத்தின் பெயர் என்ன?
..............................................................................
2. திசுத் தாளால் மூடப்பட்ட அந்தத்ததை ஒளியை நோக்கித் திருப்பி மேற்குறித்த உபகரணத்தை மெதுவாக அசைத்து மற்றைய அந்தத்தின் ஊடாகப் பார்க்கும்போது காணக்கூடியவற்றைச் சுருக்கமாக எழுதுக.

வி.என்.எஸ்.உதயசந்திரன்
B.A. (Cey) B.Ed(Hons) Dip.in.Ed.

(தொடரும்)

# தமிழ் நெடுங்கணக்கு

உலகில் பன்மொழிகள் பேசப்படுகின்றன. அம்மொழிகளுள் தொன்மையான மொழிகளாகக் கருதப்படுபவை தமிழ், சீனம் முதலானவையே. சீனத்தைக் காட்டிலும் தமிழ்மொழி மிகமிகத் தொன்மையானது. எந்த ஒரு மொழியிலும் மொழி தோன்றிய காலத்தில் அம்மொழியில் இலக்கியம் தோன்றும் எனக்கூறமுடியாது. மொழி தோன்றி வளர்ச்சியடைந்த நிலையில்தான் இலக்கியம் தோன்றும். இதற்குப் பல நூறு வருடங்கள் செல்லும். அவ்வாறு தோன்றிய இலக்கியம் செழுமைநிலை அடைய மேலும் பலநூறு வருடங்கள் செல்லும். தமிழ்மொழியில் இரண்டாயிரம் ஆண்டுகால பழமை வாய்ந்த அகநானூறு, புறநானூறு போன்ற செழுமையான இலக்கியங்கள் இருக்கின்றன என்றால் தமிழ்மொழியின் தொன்மை சொல்லாமல் விளங்குமன்றோ? இத்தகைய தமிழ்மொழியில் உள்ள எழுத்துக்கள் "தமிழ் நெடுங்கணக்கு" என அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ் நெடுங்கணக்கில் உள்ள எழுத்துக்கள்

1. உயிரெழுத்து
2. மெய்யெழுத்து
3. உயிர்மெய்யெழுத்து
4. ஆய்தவெழுத்து என நான்கு பெரும் பிரிவுகளாக வகுக்கப்பட்டுள்ளன.

தமிழ் நெடுங்கணக்கு அட்டவணையில் இடமிருந்து வலமாக "அ" முதல் "ஔ" ஈறாக உள்ள 12 எழுத்துக்களும் 'உயிரெழுத்துக்கள்' எனப்படும். இது 'ஆவி' எனவும் அழைக்கப்படும். இந்த உயிரெழுத்துக்களுள் ஒரு மாத்திரை ஓசை கொண்டவை குறில் எனவும், இரண்டு மாத்திரை ஓசை கொண்டவை நெடில் எனவும் மேலும் இருவகையாக வகைப்படுத்தப்படும். இந்த வகையில் 5 உயிர்க்குறில்களும் 7 உயிர் நெடில்களும் உள. அவையாவன:

உயிர்க்குறில் - அ, இ, உ, எ, ஒ
உயிர்நெடில் - ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ

தமிழ் நெடுங்கணக்கு அட்டவணையில் மேலிருந்து கீழாக "க்" முதல் "ன்" ஈறாக உள்ள 18 எழுத்துக்களும் 'மெய்யெழுத்துக்கள்' எனப்படும். இம்மெய்யெழுத்து "உடம்பு, உடல், ஒற்று, புள்ளி" என பிறபெயர்களாலும் அழைக்கப்படும். இவை 1/2 மாத்திரை ஓசை கொண்டவை. ஒலிப்பின்போது தடங்கலுக்கு உள்ளாகுபவை. மார்பில் தடங்கலுக்கு உள்ளாகும்போது 'வல்லினம்' எனவும், மூக்கு நுனியில் தடங்கலுக்கு உள்ளாகுபவை "மெல்லினம்" எனவும், மிடற்றில் தடங்கலுக்கு உள்ளாகுபவை "இடையினம்" எனவும் கொள்ளப்படும். இந்த வகையில் மெய்யெழுத்துக்கள் வல்லினம், மெல்லினம், இடையினம் என மூவகையாக வகைப்படுத்தப்படுகின்றன. அவையாவன:

வல்லினம் - க், ச், ட், த், ப், ற்
மெல்லினம் - ங், ஞ், ண், ந், ம், ன்
இடையினம் - ய், ர், ல், வ், ழ், ள்

வல்லினம் - வன்கணம், வலி, வன்மை வல்லொற்று எனவும் அழைக்கப்படும். மெல்லினம்- மென்கணம், மெலி, மென்மை, மெல்லொற்று எனவும், இடையினம்- இடைக்கணம், இடை, இடைமை, இடையொற்று எனவும் அழைக்கப்படும்.

மெய்யோடு உயிர் சேர்வதால் ( க் + அ = க) உயிர் மெய் பிறக்கிறது. தமிழில்

(06 ஆம் பக்கம் பார்க்க)

# க.பொ.த. உயர்தரம்




1. மனிதவளத் திட்டமிடல் என்பது யாது?
நிறுவனத்தின் எதிர்காலத் தேவைகளுக்கான பல்வேறு ஊழியங்கள் பற்றிய எதிர்வு கூறல்கள் மனிதவளத் திட்டமிடல் ஆகும்.
2. மனிதவளத் திட்டமிடலின் முக்கியத்துவம் யாது?
நிறுவனமொன்றில்,
✹ எவ்வாறான ஊழியர்கள் தேவை
✹ எப்போது தேவை
✹ எவ்வகை தொழில்களுக்குத் தேவை.
என்பதை எடுத்துக்காட்ட மனிதவளத் திட்டமிடல் அவசியமாகும்.
3. மனிதவளத் திட்டமிடலில் உள்ளடங்கும் அம்சங்கள் யாவை?
✹ எதிர்காலத் தேவைக்கு அவசியமான ஊழியர்கள் எண்ணிக்கை பற்றிய விடயங்கள்.
✹ தற்போதிருக்கும் ஊழியர்களின் எண்ணிக்கையைவிட மேலதிகமாகத் திரட்டப்பட வேண்டிய ஊழியர்களின் எண்ணிக்கை.
✹ எதிர்கால ஊழியப்புரள்வு பற்றிய விடயங்கள்.
✹ எதிர்கால அபிவிருத்திக்குத் தேவைப்படும் பயிற்சி பெற்ற, தற்காலிக, நிரந்தர, ஊழியர்களின் விடயங்கள்.
✹ ஊழியர்களின் அதிகார வகைப்படுத்தல்கள்.
4. ஊழியர்கள் திரட்டப்படும் பொதுவான முறைகள் யாவை?
I. உள்வாரியாகத் திரட்டுதல்
II. வெளிவாரியாகத் திரட்டுதல்.
5. உள்வாரியாக ஊழியர் திரட்டுதல் என்பது யாது?
நிறுவனத்தில் ஏற்கனவே பணிபுரியும் ஊழியர்களை அவர்களது தகைமை, அனுபவங்களுக்கு ஏற்ப பதவி உயர்த்தும் நடவடிக்கைகளை குறிக்கும்.
இதன்போது அவர்கள் பற்றிய தொழிற்தகவல்கள் மற்றும் அறிக்கைகளை கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.
6. வெளிவாரியாக ஊழியர் திரட்டுதல் என்பது யாது?
வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்பட்டு விண்ணப்பிப்பவர்களின் தகைமை, அனுபவங்களுக்கு ஏற்ப பல்வேறு முறைகளின் மூலம் தேவையான ஊழியர்கள் திரட்டப்படும் முறையைக் குறிக்கும்.
7. உள்வாரி, வெளிவாரி முறைகள் மூலம் ஊழியர்கள் திரட்டப்படுவதால் பெறப்படும் அனுகூலங்கள் யாவை?

*உள்வாரி அனுகூலம்*
✹ ஊழியர்களது அதிக ஒத்துழைப்பைப் பெறமுடியும்.
✹ ஆட்சேர்ப்புச் செலவு குறைவு.
✹ தொழில் இரகசியங்களைப் பேணமுடியும்.
✹ அனுபவம் வாய்ந்த தொழிலாளர்களின் மூலம் வினைத்திறனான ஊழியத்தைப் பெறமுடியும்.
✹ ஊழியர்களை ஊக்கப்படுத்தும் ஓர் முறையாக அமையும்.

*வெளிவாரி அனுகூலம்*
✹ பயிற்சி பெற்ற தொழிலாளரைப் பெறமுடியும்.
✹ தேவைப்படும் தகைமைகளுக்கு ஏற்ப பொருத்தமான ஊழியரைத் திரட்ட முடியும்.
✹ போட்டி நிறுவன நுட்பங்கள், இரகசியங்களை அறிய வாய்ப்புண்டு.
8. ஊழியர் வெளிவாரியாகத் திரட்டப்படும் நுட்பங்கள் எவை?
✹ விளம்பரங்கள் மூலம் திரட்டலாம்.
✹ பல்கலைக்கழகங்கள், தொழில்நுட்பக் கல்லூரிகளில் வெளியேறுவோர்களில் இருந்து.
✹ தேசிய தொழில் பயிலுநர் சபை மூலம்.
✹ தொழில் வங்கி, தொழில் முகவர்கள், தொழிற்திணைக்களங்கள் மூலம்.
✹ நண்பர்கள், உறவினர்களின் தகவல்கள் மூலம்.
9. ஊழியர்களைத் தெரிவு செய்வதற்கான நுட்பங்கள் யாவை?
✹ தொழில்சார் விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்தல்.
✹ பொது உளச்சார்பு, தொழிசார் அறிவுப்பரீட்சை போன்ற எழுத்துப் பரீட்சைகளை மேற்கொள்ளல்.
✹ நேர்முகப்பரீட்சைகள் மேற்கொள்ளப்படல்.
✹ செயல்ரீதியான பரீட்சைகள் மேற்கொள்ளப்படல்.
✹ வைத்தியப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படல்.
10. ஆட்சேர்த்தலுக்கான விண்ணப்பங்கள் எவ்வாறு வகைப்படுத்தப்படும்?
1. தகுதியானவை (இவை ஏற்கப்பட்டதாக விண்ணப்பதாரருக்கு அறிவிக்கப்படும்).
2. குறைந்த தகுதியானவை (இவை ஒதுக்கி வைக்கப்படும்).
3. பொருத்தமற்றவை (இவை நிராகரிக்கப்பட்டு விண்ணப்பதாரர்களுக்கு அறிவிக்கப்படும்).
11. ஆட்சேர்த்தலில் பயன்படுத்தபடும் பரீட்சைகளின் வகைகள் யாவை?
1. புத்திக்கூர்மைப் பரீட்சை.
2. தகுதிப்பரீட்சை
3. தேர்ச்சிப்பரீட்சை
4. ஆளுமைப் பரீட்சை.
12. நேர்முகப்பரீட்சை என்பது யாது?
வேலை வழங்குவோர் - வேலை பெறுவோரை நேரடியாகச் சந்தித்து, அவரது ஆளுமைகளை மதிப்பிடுவதற்காக மேற்கொள்ளப்படும் பரீட்சையே இதுவாகும்.
13. நேர்முகப் பரீட்சை சிறப்பாக அமைய மேற்கொள்ள வேண்டிய நடைமுறைகள் யாவை?
✹ நேர்முகப்பரீட்சை பற்றி முன்னரே திட்டமிடல்.
✹ விண்ணப்பதாரரை உரியமுறையில் வரவேற்றல்.
✹ விண்ணப்பதாரரை கதைக்கும்படி தூண்டுதல்.
✹ கேள்விகளை அவதானமாகக் கேட்டல்.
14. பயிற்சியளித்தல் என்பது யாது?
ஒரு தொழில்/முயற்சியை மேற்கொள்ளத் தேவையான அறிவு, திறன் என்பவற்றைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் கற்றறியும் செயற்பாடு பயிற்சியளித்தல் எனப்படும்.
15. பயிற்சியளித்தலின் நன்மைகள் யாவை?
✹ ஊழியர்கள் ஊக்கப்படுத்தப்படுவர்.
✹ ஊழியர்களின் திருப்தி, திறன் என்பன அதிகரிக்கும்.
✹ ஊழியர்கள் இயந்திரங்கள், கருவிகளை வினைத்திறனாகப் பயன்படுத்துவர்.
✹ ஊழியர்கள் அபாயங்களைத் தவிர்க்க முடியும்.
✹ மூலப்பொருட்கள், உள்ளீடுகள் சிக்கனமாகப் பயன்படுத்த முடியும்.
✹ நிறுவன உற்பத்திகள் அதிகரிக்கும்.
16. பயிற்சிகளை வடிவமைக்கும்போது கருத்தில் கொள்ள வேண்டிய அம்சங்கள் யாவை?
✹ பயிற்சியின் நோக்கம்
✹ பயிற்சி முறை
✹ பயிற்சி மதிப்பீடு
✹ பயிற்சியின் உள்ளடக்கம்
✹ பயிற்சி நடைமுறைப்படுத்தல்.
17. தொழிலாளர் புரள்வு விகிதம் என்பது யாது?
நிறுவனத்தின் குறிப்பிட்ட வருடத்தில் பணியாற்றும் சராசரி ஊழியர்களின் எண்ணிக்கைக்கும் அவ்வருடத்தில் விலகும் ஊழியர்களின் எண்ணிக்கைக்கும் இடையிலுள்ள நூற்று வீதத் தொடர்பாகும்.

*இதன் பிரதிகூலம்:-*
✹ புதிய ஊழியரைச் சேர்ப்பதற்கான செலவு அதிகரிக்கும்.
✹ உற்பத்தி தடைப்படும்.
✹ புதிய ஊழியர்களுக்கான பயிற்சிச் செலவு அதிகரிக்கும்.

*இதன் அனுகூலம்:-*
✹ நீண்டகாலம் பணியாற்றுவோருக்கு பதவி உயர்வு வழங்கமுடியும்.
✹ வெளியிலிருந்து பயிற்சி, திறன்மிக்க ஊழியரைப் பணிக்கமர்த்தமுடியும்.

18. 'தொழில் இணக்கம்' என்பது யாது?
திரட்டப்பட்ட ஊழியர்கள் அதனது தொழில்களில் ஈடுபடமுன் நிறுவனம் பற்றிய பொதுவான அறிவுரைகளையும், தொழில்சார் சிறப்பான அறிவுரைகளையும் வழங்கக்கூடிய சூழ்நிலைகளை உருவாக்குதல் தொழில் இணக்கம் ஆகும்.

19. 'செயற்திறன் மதிப்பிடல்' என்பது யாது?
தொழிலாளர்களின் வேலையின் தன்மை மற்றும் ஆற்றல்கள், தரங்களை அளவிடும் நோக்கில் மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகள் செயற்திறன் மதிப்பிடல் எனப்படும்.

20. செயற்திறன் மதிப்பிடலின் நோக்கங்கள் யாவை?
✹ ஊழியர்களின் திறமையை இனங்கண்டு ஊக்குவிக்க முடியும்.
✹ ஊழியர்களுக்குப் பதவி உயர்வுகளை வழங்க முடியும்.
✹ திறமையற்றவர்களை இனங்கண்டு பயிற்சி வழங்கமுடியும்.
✹ ஊழியர்கள் தமது திறமைகளை இனங்கண்டு திருப்தி அடையமுடியும்.

21. வேதனம் என்பது யாது?
ஊழியர்கள் குறித்த பணிக்கு/காலத்திற்க்கு ஈடுபடுத்திய தமது உடல், உள ரீதியான உழைப்புக்காகப் பெற்றுக்கொள்ளக்கூடிய சம்பளங்களும், படிகளும் வேதனம் எனப்படும்.

22. வேதனங்களை நிர்ணயிக்கும்போது கவனத்தில் கொள்ள வேண்டிய காரணிகள் யாவை?
✹ இழிவு வேதனம் பற்றிய சட்டங்கள்.
✹ வாழ்க்கைச்செலவு
✹ போட்டி நிறுவனம் வழங்கும் வேதனங்கள்
✹ தூண்டல் கொடுப்பனவுகள்.
✹ ஊழியமொன்றின் சிறப்பான அனுபவம்.
✹ ஊழியக் கேள்வியும், நிரம்பலும்.
✹ தொழிலின் தன்மை.

23. ஓர் ஊழியரால் வேதனம் தவிர, பெற்றுக்கொள்ளப்படும் ஏனைய கொடுப்பனவுகள் யாவை?
✹ மேலதிக நேரக் கொடுப்பனவு
✹ மிகை ஊதியக்கொடுப்பனவு
✹ E.P.F. கொடுப்பனவு
✹ E.T.F. கொடுப்பனவு
✹ ஏனைய விசேட படிகள்.

24. கூலி முறைகள் யாவை?
✹ துண்டு வீதக்கூலி
✹ தூண்டுதல் கூலி
✹ மிகை நேரக்கூலி
✹ நேரக்கூலி
✹ உபகாரக்கூலி
✹ தரகுக்கூலி.

25. ஊழிய வளத்தை மதிப்பீடு செய்யும்போது முயற்சியாளர் கவனத்திற்கொள்ள வேண்டிய காரணிகள் யாவை?
✹ ஊழியக் கிடைப்பனவு
✹ ஊழிய இயல்பு
✹ ஊழிய மூலங்கள்
✹ ஊழியக் கிரயம்
✹ ஊழியத்தைப் பயன்படுத்தும் பிரமாணம்.

**இ.உமாகாந்தன் B.Com.**

(05 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உள்ள பதினெண் மெய்களோடும் பன்னீர் உயிரும் சேர்வதால் (18 x 12 = 216) 216 'உயிர் மெய் எழுத்துக்கள்' தோன்றுகின்றன. இவை மெய்யின் அடிப்படையில்,

வல்லின உயிர்மெய்
மெல்லின உயிர்மெய்
இடையின உயிர்மெய்

என மேலும் மூவகையாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு பிரிவிலும் (216/3=72) 72 உயிர் மெய்யெழுத்துக்கள் இடம்பெறுகின்றன.

வல்லின உயிர்மெய்யை எடுத்துக்கொண்டால் அதனை உயிரின் அடிப்படையில் மேலும் குறில் நெடிலெனப் பாகுபடுத்த முடியும். இந்த வகையில் வல்லின உயிர்மெய்யிலே (72/12 x 5= 30, 72/12 x 7 = 42) 30 வல்லின உயிர்மெய்க் குறில்களும், 42 வல்லின உயிர் மெய் நெடில்களும் உள்ளன. இதுபோலவே மெல்லின, இடையின, உயிர் மெய்களும் உள.

தமிழ் நெடுங்கணக்கு அட்டவணையில் இடதுபக்க மேல் மூலையில் அடுப்புக்கல் (∴) வடிவில் அமைந்த ஓர் எழுத்து 'ஆய்தம்' ஆகும். இது உயிருமல்ல, மெய்யுமல்ல. உயிரோடுசேரும்போது உயிர் போலவும், மெய்யோடு சேரும்போது மெய் போலவும் காட்சிதரும். சார்ந்ததன் வண்ணம் நிற்பதால் சார்பெழுத்து என்று சிறப்பிக்கப்படும் பேறுபெற்றது.

இவ்வாறாகத் தமிழ் நெடுங்கணக்கு வகைப்படுத்தப்பட்டு ஆராயப்படுவதைக் காணலாம்.

தமிழ் நெடுங்கணக்கு




**க.தர்மராஜா**
(Sp.Trd.Tamil, B.A , P.G.D.E., M.Ed., M.Phil.q.)
விரிவுரையாளர், பலாலி ஆசிரியர் கலாசாலை.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

கணைகொடிது யாழ்கோடு செல்வது ஆங்கு அன்ன
வினைபடு பாலால் கொளல்.

- திருக்குறள்.

# நமது நோக்கு

## சலிப்பும் பொறுப்பும்!

அரசாங்கத்தின் மிக முக்கியமான பொறுப்பிலிருக்கும் அமைச்சரான ரீரோன் பெர்ணான்டோ - சமாதானத்தைக் காக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திடமேயிருப்பதை வெளிப்படையாகவே சுட்டிக்காட்டியுள்ளார்.

லண்டனிலுள்ள இலங்கையைச் சேர்ந்த கல்வியியலாளர்கள், இராஜதந்திரிகள் மத்தியில் உரையாற்றும் போது இதனை வலியுறுத்திக்கூறிய அவர் - அமைதிக்கு இதுவே இறுதிச்சந்தர்ப்பம் என்பதையும் எச்சரிக்கையுணர்வு மேலிடக் குறிப்பிட்டுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க அரசாங்கமானது அமைதி வழிமுறைகளில், முன்னர் வந்த அரசாங்கங்களைப் போலல்லாது - நேர்மையுடனும் ஆர்வத்துடனும் இறங்கியிருப்பதோடு மட்டுமல்லாது தீர்வொன்றை எட்டுவதற்கான முயற்சிகளிலும் நீதியான பங்களிப்பை வழங்குவதாகவே நம்பப்படுகிறது.

ஆனால், இந்த நேர்மையும், ஆர்வமும், பங்களிப்பும்- சமாதானம் ஏற்படுத்தப்பட்டு ஒருவருட காலத்தில் - வெறும் இணக்கப்பாடுகள் அளவிலேயே நின்று விடுவதை எவ்வாறாயினும் சுட்டிக்காட்டவே வேண்டியுள்ளது.

தமிழ் மக்களுக்கான புனர்வாழ்வு - புனரமைப்புப் பணிகள் யாவுமே இன்னமும் வேகங்கொள்ள ஆரம்பிக்கவில்லை என்பதோடு - அமைதியின் பயன்களும் தொடர்ந்து அவர்களுக்கு எட்டாக்கனியாகவே தூர விலகி நிற்கின்றன.

இந்த நிலைமையானது அரசாங்கத்தின் செயற்பாடுகளில் சலிப்பையும், நம்பிக்கையீனத்தையும் உண்டாக்கும் அளவுக்கு தமிழ்மக்களிடம் பரவத்தொடங்கியிருப்பதை அரசாங்கம் உணரத்தலைப்பட்டாக வேண்டும்.

அதேவேளை - தென்னிலங்கையிலிருந்து - ஜனாதிபதி தரப்பிலிருந்தும், எதிர்க்கட்சிகளிடமிருந்தும் எழுந்து வரும் அமைதிக்கு விரோதமான கருத்துக்களும்,

படையினர் தரப்பிலிருந்து - கிடைப்பதற்கு கஷ்டமாகும் அமைதிக்கான ஒத்துழைப்புக்களும் - சமாதானத்தின் மீதான எதிர்பார்ப்பைப் பாதிக்கச் செய்துவிடுவதாக நாளொருமேனியும் பொழுதுதொரு வண்ணமுமாக வளர்ந்து வருவதைப் புறந்தள்ளிவிடவும் முடியாது.

தமிழ் மக்களிடம் உருவாகிவரும் இந்த நம்பிக்கையீனம் - ரணில் அரசாங்கமும் மற்றைய சிங்கள அரசாங்கங்களைப் போன்றதே என்ற நிலைக்குத் தீவிரமாகும் வரை காத்திருக்காது - மக்களிடம் அமைதி பற்றிய நம்பிகையை கட்டியெழுப்ப வேண்டிய பாரிய பொறுப்பு அரசாங்கத்திற்கு இருக்கிறது.

ஆனால் - அரசாங்கம் இந்தவகையில் தனது நடவடிக்கைகளை, செயற்பாடுகளைத் துரிதப்படுத்துவதற்கான சமிக்ஞைகளும் மிகவும் குறைவாக அல்லது பலவீனமாக இருப்பதையே காணமுடிவதால்- சமாதானத்தின் மீதான தனது நேர்மையை உடனடியாக நிரூபித்தாக வேண்டிய கட்டத்திலேயே அரசாங்கம் இருக்கிறது என்பதைச் சொல்லியாக வேண்டியுள்ளது.

விடுதலைப்புலிகள் சமாதானப் பாதையில் இருந்து விலகாதிருக்க அனைத்து வாய்ப்புக்களையும் பயன்படுத்தி இயன்றதைச் செய்யவேண்டிய பொறுப்பில் அரசாங்கம் இருப்பதாக ரீரோன் பெர்ணான்டோ கூறியிருப்பது - இந்த நெருக்குதலின் விளைவானதாக இருக்கலாம்.

அதேவேளை - யுத்தத்தைப் பற்றிய அவரது பேச்சின் பகுதியில் -

இது எமது பிள்ளைகளைப் போர் முனைக்கு அனுப்புகின்ற பிரச்சினை. அதனாலேயே இதை நாம் கையில் எடுத்திருக்கிறோம் என்றும் அவர் குறிப்பிடுவதானது - இனியொரு யுத்தத்தை எதிர்நோக்கும்நிலையில் அரசாங்கம் இல்லை என்பதைக் காட்டுகிறது.

அரசாங்கத்தின் நிலைப்பாடு இவ்வாறிருந்தாலும்- அது வாளாதிருப்பதால் அல்லது அமைதி நோக்கிய இணக்கங்களை செயலாக்கம் செய்வதில் தாமதம் செய்வதால், இந்தப் புரிதலின் அர்த்தம் என்பது பலனற்றதே என்பதை அரசாங்கத்தரப்பு கவனத்திற்கொள்ள வேண்டும்.

நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியின் அழுத்தங்கள் ஒருபுறம், தென்னிலங்கைப் பேரினவாத சக்திகள், குழப்பவாதிகள் மறுபுறம், இந்தியா போன்ற பிராந்திய வல்லரசுகளை 'தாஜா' செய்யும் தேவை இன்னொருபுறம் என - பல முனைகளிலும் அரசாங்கம் நெருக்கடிக்குட்பட்டு நிற்கின்ற நிலையில், இந்த அரசாங்கத்தால் தமிழ் மக்களுக்கான நீதியான தீர்வைத் தர முடியுமா என்ற நியாயமான கேள்விக்கு-

தனது செயற்பாடுகள் மூலமாகவே பதில் தர வேண்டிய பொறுப்பிலிருக்கிறது ரணில் அரசாங்கம் என்பதே இன்றைய களநிலவரமாக இருக்கிறது.

# சமஷ்டி குறித்து அரசியல் தலைவர்களுக்கு விளக்கமளிக்க நடவடிக்கை எடுக்கப்படும்

### ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவன நிறைவேற்றுப் பணிப்பாளர்

சமஷ்டி ஆட்சிமுறை குறித்து விளக்கங்களை ஏற்படுத்துவதற்காகவே அரசதரப்பு, எதிர்தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களை நாம் ஐரோப்பிய மற்றும் ஸ்கன்டினேவிய நாடுகளுக்கு அழைத்துச் சென்றிருந்ததாக -

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் அல்பா தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது -

சமஷ்டி முறையில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டிருக்கின்றது. மேலும் பல அரசியல் விளக்கங்களை அரசியல் தலைவர்களுக்கு நாம் வழங்கவுள்ளோம்.

நெடுந்தீவு சம்பவம் ஓர் சிறியவிடயம். சமாதான பேச்சுவார்த்தையில் பாதிப்பை ஏற்படுத்தாது. அவ்வாறான சம்பவங்கள் சமாதான பேச்சின்போது ஏற்படுவது இயல்பானது எனத் தெரிவித்தார்.

## ஈராக் மீதான யுத்த அச்சுறுத்தல்; நாட்டு மக்களுக்கு சந்திரிகா உரை!

(கொழும்பு)

அமெரிக்கா - ஈராக் நாடுகளிடையே நடைபெற்றுவரும் யுத்த அச்சுறுத்தல்கள் இலங்கையை எவ்வாறு பாதிக்கும் என்பது பற்றி ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு உரையாற்றவுள்ளார்.

இதற்கு முன்னதாக ஜனாதிபதியின் ஆலோசகரும் சகோதரருமான அநுரா பண்டாரநாயக்கவுக்கு இந்தப் பாதிப்புக்கள் தொடர்பாக அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு ஏற்கனவே பணிப்புரை விடுத்திருந்தார்.

இதனை அடுத்து அநுரா பண்டாரநாயக்க நேற்று முன்தினம் அமெரிக்கா - ஈராக் நாடுகளின் தூதுவர்களைச் சந்தித்து உரையாடினார்.இவரது அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதும் ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு உரையாற்றுவார். (01)

## சுகாதார சீர்கேட்டை ஏற்படுத்தும் அஸ்பெஸ்டஸ் கூரைத்தகடுகள்

### கட்டடக்கலை வல்லுநர்கள் எச்சரிக்கை

அஸ்பெஸ்டஸ் கூரைத் தகடுகள் சுகாதாரச் சீர்கேட்டை ஏற்படுத்தும் ஆபத்துள்ளதாகக் கட்டடக்கலை நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

உலகிலுள்ள 21 நாடுகளில் அஸ்பெஸ்டஸ் கூரைத்தகடுகள் தடைசெய்யப்பட்டிருக்கின்றன. இதனால் பல நிறுவனங்கள் வளர்முக நாடுகளுக்கு அஸ்பெஸ்டஸ் கூரைத்தகடுகளைக் குறைந்தவிலையில் சந்தைப்படுத்தி வருகின்றன.

அஸ்பெஸ்டஸ் கூரைத்தகடுகளால் புற்றுநோய் ஏற்படும் அபாயம் இருப்பதாக அவுஸ்திரேலியாவில் பத்து வருடங்களுக்கு மேலாகப் பணியாற்றிவரும் பொறியியலாளரான அனுர திசநாயக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தும்பினாலான கூரைத்தகடுகளைப் பேராதனைப் பல்கலைக்கழக ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டபோதும் இவற்றை உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும் தெரியவருகிறது.





திருகோணமலை வரலாறு தொடர்பான ஆவணங்களை பேணுவதற்காக ஆவணக் காப்பகம் ஒன்றை அமைப்பது தொடர்பாக, திருமலை நகரில் அண்மையில்நடைபெற்ற கலந்துரையாடலில் பங்கு பற்றியோரைப் படத்தில் காணலாம்.

## நுணாவில் பகுதியில் மிதிவெடிகள் அகற்றும் பணியில் ஹலோ ட்ரஸ்ட்

கைதடி, நுணாவில் சந்திக்கு அண்மையில் உள்ள இராணுவ முகாமிற்கு முன்பக்கமாகவுள்ள நிலப்பரப்பிலுள்ள வெடிபொருட்கள் "ஹலோ ட்ரஸ்ட்" மிதிவெடி அகற்றும் குழுவினரால் அகற்றப்பட்டுவருகின்றது.

ஏ-9 வீதியின் வடக்குப் புறமாக, நுணாவிலில் புதிதாக அமைக்கபபட்ட இராணுவ முகாமிற்கு முன்பாக - 8 ஏக்கர் பரப்பளவிலுள்ள பகுதியில் உள்ள வெடிபொருட்களையே இவர்கள் இயந்திரங்கள் மூலம் அகற்றிவருகின்றனர். (25)

## செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவன ஆண்டுவிழா

(நெல்லியடி)

செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் 21 ஆவது ஆண்டு நிறைவுவிழா எதிர்வரும் 15 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்குச் சீனியர் ஒழுங்கை, கலட்டியில் அமைந்துள்ள அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பங்கேற்க கொழும்பு, திருகோணமலை, மட்டக்களப்பு, வவுனியா மாவட்டங்களைச் சேர்ந்த செவிப்புலன் வலுவற்றோரும் இங்கு வருகைதரவுள்ளனர்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக - யாழ்.மாவட்ட அரச அதிபர், இந்து கலாசார அமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா ஆகியோரும், கௌரவ விருந்தினராக, விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதியும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதேவேளை, செவிப்புலன் வலுவற்றோர் நிறுவன அங்கத்தவர்களுக்கான கிரிக்கெட், கால்பந்து, மரதன் ஓட்டம் ஆகிய விளையாட்டு நிகழ்வுகள் எதிர்வரும் 14 ஆம் திகதி நடைபெறவுள்ளதாக இவ்வமைப்பின் செயலாளர் அறிவித்துள்ளார். (13)

## வாகன அனுமதிப் பத்திரம் பெறும் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு

### மோட்டார் வாகனப் பதிவு ஆணையாளர் அறிவிப்பு

வாகன அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்வதில் இதுவரை காலமும் இருந்துவந்த பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு காணப்படும் என மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் காமினி செனரத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மார்ச் 31 ஆம் திகதிக்குள் 1 லட்சத்து 25 ஆயிரம் வாகன அனுமதிப்பத்திரங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

அத்துடன், தமது திணைக்களத்தில் கணினிகளுக்கு ஏற்பட்டுள்ள பற்றாக்குறை, ஆளணிப் பற்றாக்குறை என்பனவற்றாலேயே அனுமதிப்பத்திரங்களை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

# தமிழீழ மீட்புநிதிக் கடன்மீளல்

## நேர அட்டவணை

தமிழீழ மீட்புநிதிக் கடனை மீளளிப்பதற்காக 1990 ஆம் ஆண்டிலிருந்து 2002 ஆம் ஆண்டு வரை குலுககல் மூலம் தெரிவு செய்யப்பட்டவர்களில், இதுவரை தமது கடனை மீளப்பெறாதோர் பின்வரும் நாட்களில் மீளப் பெறலாம் என விடுதலைப் புலிகளின் நிதித்துறைப்பொறுப்பாளர் யோ.தமிழ்க்குமரன் அறிவித்துள்ளார்.

**14.02.2003**

| | | |
|---|---|---|
| வருவாய்ப் பகுதிச் செயலகம் | - புளியங்குளம் | காலை 10.00 - மு.ப 10.30 மணி |
| மத்திய கல்லூரி | - கிளிநொச்சி | பி.ப 3.00 - பி.ப 4.00 மணி |

**15.02.2003**

வேம்பொடுகேணி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை பளை - காலை 9.00 - ந.ப 12.00 மணி.

# மண்ணோடும் மக்களோடும் இணைந்த செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தோம்!

**பத்திரிகையியலுக்கு ஓர் அறிமுகம் என்ற தனது முதல் நூலுக்கு அண்மையில் வட- கிழக்கு மாகாண அமைச்சின் சாகித்திய விருதினை பெற்றுக்கொண்டவரும், பாதுகாவலன் பத்திரிகையின் பிரதம ஆசியருமான ரூபன் மரியாம்பிள்ளை அடிகளாருடன் ஓர் சந்திப்பு.**




கேள்வி : மார்கழி மாதம் 30 ஆம் திகதி திருகோணமலையில் நடைபெற்ற தமிழ் விழாவில் தங்கள் "பத்திரிகையியலுக்கு ஓர் அறிமுகம்" என்ற நூல் வட- கிழக்கு மாகாண அமைச்சின சாகித்திய விருதினைப் பெற்றுக்கொண்டதை அறிவோம். பத்திரிகையாளர்களுக்குப் பயனுள்ள இந்நூல் பற்றிச் சற்றுத் தெரிவிக்க முடியுமா?

பதில் : "பத்திரிகையியலுக்கு ஓர் அறிமுகம்" என்ற எனது முதல் நூலினை 2001 ஆம் ஆண்டின் நடுப் பகுதியில் வெளியிட்டிருந்தேன். 1979 ஆம் ஆண்டு முதல் பத்திரிகைகளுக்கு ஆக்கங்களை எழுதிவருகின்ற படியினால், பத்திரிகைகளோடும் அதன் ஆசிரியர்களோடும் எனக்கு ஓர் நெருங்கிய தொடர்பு இருந்தது. எனவே பத்திரிகையியல் பற்றியும், அதன் நெளிவு சுளிவுகள் பற்றியும் நீண்டகாலமாக நான் படித்தும், ஆய்வும் செய்துகொண்டு வந்தேன்.

1992 ஆம் ஆண்டில் பத்திரிகையியல் சான்றிதழ் பட்டத்தை இலங்கை திறந்த பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றுக்கொண்டேன். 1997ஆம் ஆண்டு பாதுகாவலன் பத்திரிகையின் ஆசிரியர் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பின்னர், பாதுகாவலன் பத்திரிகையாளர்களுககெனப் பத்திரிகையியல் பயிற்சிப் பட்டறைகளை ஆண்டுதோறும் வழங்கிக் கொண்டு வந்தேன். ஆறு மாதகால தொடர் பயிற்சி ஒன்றினை பத்திரிகை ஆசிரியர்கள் மற்றும் பத்திரிகையாளர்களின் துணையுடன் பாதுகாவலனின் 125 ஆவது ஆண்டான, 2000 ஆம் ஆண்டில் நடத்தத் திட்டமிட்டோம். நாட்டு நிலைமை காரணமாக அது கைகூடாமல்போய்விட்டது. இக் காலப்பகுதியில் நான் படித்தும், சேகரித்தும், ஆய்வுசெய்தும் வந்த விடயங்களை தொகுத்து ஒரு நூல் ஒன்றினை வெளியிட வேண்டுமெனப் பலர் வேண்டுகோள் விடுத்தனர். அதன் விளைவாகவே இந்நூல் வெளியானது.

கேள்வி : பத்திரிகையியல் சம்பந்தமாக இலங்கையில் தமிழ்மொழியில் வெளிவந்த முதல் நூல் என்கின்றவகையில் இந்நூல் எவ்வாறு வரவேற்புப் பெற்றது? பத்திரிகையாளர்கள் இதனை உரியவிதமாகப் பயன்படுத்திக் கொண்டார்களா?

பதில்: பத்திரிகை இயல்பற்றி தமிழில் வெளிவந்த முதல் நூலாக இது இருக்கலாம். இந்நூலினை வெளியிடுவதற்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் வெளிவருகின்ற பத்திரிகைகளின் ஆசிரியர்களுடன் கலந்துரையாடினேன். அவர்களும் இந்நூலுக்கான சில குறிப்புக்களைத் தந்தது டன், இளம் பத்திரிகையாளர்களுக்குப் பயனுள்ள இந்நூலை வெளியிடும்படி ஊக்கம் தந்தனர். பத்திரிகையாளர்கள் ஐயா சச்சிதானந்தம், வாமதேவன் போன்றோர் இந்நூலின் சில பகுதிகளை வெளியிடுவதற்கு முன்னதாகவே படித்துக் குறிப்புத் தந்தனர். நூல் வெளியீட்டினை ஆடம்பரமாகச் செய்யவிரும்பவில்லை. பாதுகாவலன் பத்திரிகையாளர்கள், புனித வளன் அச்சக பணியாளர்கள் ஆகியோர் மத்தியில் ஒரு சிறிய நிகழ்வில் இந்நூலினை வெளியீடு செய்தேன்.

பத்திரிகையாளர் வித்தியாதரன் நூலினை ஆய்வுசெய்து வெளியிட்டு வைத்தார். இந்நூலுக்கான முன்னியலினை, பத்திரிகையாளர் பயிற்சியினைப் புறநிலை அலகுகள் மூலமாக வழங்கிவருகின்ற பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் எழுதினார். ஈழநாடு பத்திரிகையின் நீண்டகால பணி அனுபவம் உடையவரான எஸ்.பெருமாள் ஆய்வியலினை எழுதியிருந்தார். பத்திரிகையியல் பற்றிய நூல் என்றபடியால், எல்லா பததிரிகைகளும் இந்நூல் பற்றிய விமர்சனங்களையும், செய்திகளையும் பிரசுரித்தன. இதனால் இந்நூல் பிரபல்யமடைந்தது. பல பயிற்சிப் பட்டறைகளில் இந்நூலினை பயன்படுத்தவும், விற்பனை செய்யவும் பலர் முன்வந்தார்கள்.

கோப்பாய் செஞ்சிலுவைச் சங்கத்தினால் நடாத்தப்படும் பத்திரிகையியலாளர்களுக்கான பயிற்சிப் பட்டறையில் சங்கச் செயலர் மயில்வாகனம அவர்களால் இந்நூல் அறிமுகம் செய்யப்பட்டது. இதன் பின்னர் பத்திரிகையியல் பற்றிய பயிற்சிகளை நடத்தும்போது சில உரைகளை ஆற்றுமாறு எனக்கும் அழைப்பு விடுத்ததோடு, எனது நூலினையும் பிரபல்யப்படுத்தினர்.

கேள்வி : உங்களுடைய முதலாவது நூல் சாகித்திய விருது பெற்ற பின்னர், இத்துறையில் வேறு நூல்கள் போன்ற பங்களிப்பு செய்யவில்லையா?

பதில் : கடந்த ஆண்டு மார்கழி மாதத்தில் பத்திரிகையியல் அடிப்படைகள் என்ற எனது இரண்டாவது நூலினை வெளியிட்டேன். இந்நூலில் பத்திரிகைகளின் தன்மை அமைப்பு, உள்விபரங்கள், மொழிநடை, விளம்பரங்கள், இலங்கை பத்திரிகைப் பேரவை, பத்திரிகையாளர் சுதந்திரம், பத்திரிகையாளர் ஒழுக்க நெறி எனப் பல விடயங்களை இணைத்துள்ளேன். அத்தோடு, புலம்பெயர் நாடுகளில் வெளிவருகின்ற தமிழ் பத்திரிகைகள் பற்றிய விளக்கத்தினையும், இலங்கையில் வெளிவந்த தமிழ் பத்திரிகைகளின் முழு விபரப்பட்டியல் ஒன்றினையும் முழுமைப்படுத்த முயன்றிருக்கிறேன. இந்நூலும் பெருவரவேற்பைப் பெறும் என நம்புகிறேன்.

இந்நூலின் அட்டைப் படத்தினை இலங்கையில் இன்று வெளிவந்து கொண்டிருக்கின்ற தமிழ் தினசரி பத்திரிகைகளின் பெயர் தலைப்புடன் அமைத்திருக்கிறேன். மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் பத்திரிகைத்துறையில் முதுகலைமாணி பட்டப்படிப்பை மேற்கொண்டுள்ளதோடு சவுந்தரம் பத்திரிகையியல் நிலையம் என்ற பெயரில் பத்திரிகை நிலையம் ஒன்றை நிறுவி, பத்திரிகை நூல்களையும், பத்திரிகைப் பயிற்சிகளையும் வழங்குவதற்கான ஒரு தனி முயற்சி ஒன்றையும் மேற்கொண்டுள்ளேன்.

கேள்வி : பாதுகாவலன் பத்திரிகையின் ஆசிரியர் என்ற வகையில் அதனை ஒரு சமயப்பத்திரிகை என்ற எல்லைக்கு அப்பால் செயற்படுத்த என்ன நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளீர்கள்?

பதில் : பாதுகாவலன் பத்திரிகையைப் பொறுப்பெடுத்த பின்னர் பாதுகாவலன் ஒரு சமயப்பத்திரிகை என்ற குறுகியபார்வையினை அகலப்படுத்தியிருக்கிறேன். வெறும் சமய செய்திகளை மட்டும் பிரசுரிக்காது, மண்ணோடும் மக்களோடும் இணைந்தவகையில் இனப்பிரச்சினை தொடர்பான பல விடயங்களையும், செய்திகளையும் பத்திரிகை வாயிலாக வெளிக்கொணர்ந்திருக்கிறேன்.

மக்களுடைய துன்ப, துயர அனுபவங்கள் சம்பந்தமான யாழ். ஆயருடைய அறிக்கைகளையும், கடிதங்களையும் இப்பத்திரிகை மூலமாக வெளிக்கொணர்ந்திருந்தேன். பிரதமருக்கும், ஜனாதிபதிக்கும், சம்பந்தப்பட்ட ஏனையவர்களுக்கும் ஏ-9 பாதைத் திறப்பு சம்பந்தமாகவும் வேறும் பல விடயங்கள் தொடர்பாகவும் அடிக்கடி எழுதப்பட்ட கடிதங்களையும், அறிக்கைளையும் உரிய முக்கியத்துவத்துடன் வெளியிட்டேன். யாழ். ஆயர் நீண்டகாலமாக வலியுறுத்தி வந்த மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தினை நாமும் வலியுறுத்தி பல வகைகளில் தற்போதைய சமாதான முயற்சிகளுக்குப் பங்களிப்புச் செய்தோம். இந்தவகையில் பாதுகாவலன் பத்திரிகை சமாதானத்துக்காகப் பங்களிப்புச் செய்த ஒரு சமயப் பத்திரிகையாகத் திகழ்ந்திருக்கிறது.

இவ்வாறு செய்திகளை வெளியிட்டபோதும், பத்திரிகையியல் தொடர்பான ஒழுங்குமுறைகளையும், வடிவமைப்பு முறைகளையும் நுணுக்கமாக பின்பற்றினேன். இதனால் சிறந்த வடிவமைப்புக் கொண்ட தமிழ் பத்திரிகைகளுக்கான 2000 ஆம் ஆண்டுக்கான விருதினை இலங்கைப் பத்திரிகையாளர் சங்கத்திடமிருந்தும் பெற்றுக்கொண்டேன்.

கேள்வி : இன்றைய அச்சுத்துறை மிகவேகமாக வளர்ச்சியடைந்து வருகிறது. யாழ்ப்பாணத்தின் மிகப்பழைய அச்சகமாகிய வளன் கத்தோலிக்க அச்சகத்தின் நிர்வாகியாகச் செயற்படுகின்றீர்கள். பழைய அச்சுக்கோர்க்கும் இயந்திர முறைமையில் இருந்து, கணனிமயப்பட்ட செயற்பாடுகளுக்குள் எவ்வாறு உங்களைப் பொருத்தப்பாடு உடையதாக ஆக்கிக்கொள்கிறீர்கள்?

பதில் : யாழ். நகரிலே மிகப் பழைய அச்சகமாகவும் பெரிய அச்சகமாகவும் திகழ்ந்துவந்த புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தினைக் கால மாற்றத்துக்கு ஏற்பவும், பொருளாதார வளத்துக்கு ஏற்பவும் இயன்றளவு நவீன மயப்படுத்த முற்பட்டிருக்கிறேன். கணினியின் வருகையினால் புதிய பல அச்சகங்கள் வீதிக்கு வீதி திறக்கப்பட்டாலும், எமது அச்சகத்தின் தனித்துவத்தையும், தொழில்நுட்பத்தையும், பழம் பெயரினையும் இன்னும் கட்டிப் பாதுகாத்துவருகிறேன்.

எமது அச்சகத்தில் செய்யப்படுகின்ற வேலைகளின் தரத்தையும், தொழில்நுட்பத்தையும் வாடிக்கையாளர்களே அறிவார்கள். யாழ் நகரில் எதிரீட்டுப் பதிவு அச்சுமுறையில் (Offset) வெளியான முதல் பத்திரிகையாக எமது அச்சகப்பத்திரிகையான பாதுகாவலனே வெளியானதை இங்கு குறிப்பிடவேண்டும். 1998 ஆம் ஆண்டு ஆனி மாதத்தில் பாதுகாவலன் பத்திரிகையினை எதிரீட்டுப் பதிவு அச்சுமுறையில் வெளியிட்டு, யாழ். நகரில் இவ்வாறு வெளியிடப்பட்ட முதல் பத்திரிகை என்ற பெயரையும் பொறித்துக் கொண்டோம். அதே யாண்டு கிறிஸ்மஸ் சிறப்பிதழை நான்கு வர்ணத்தில் முதலில் வெளியிட்டோம். நான்கு வர்ணத்தில் யாழ். நகரில் முதல் வெளியிடப்பட்ட பத்திரிகையும் பாதுகாவலன் பத்திரிகையேதான்.



அருட்திரு.
ரூபன் மரியாம்பிள்ளை

கேள்வி : கத்தோலிக்க தொடர்பு சாதன ஆணைக்குழுவின் இயக்குநராக இருக்கின்ற நீங்கள், இதற்கு ஊடாக ஆற்றுகின்ற பணிகளைக் கூறமுடியுமா?

பதில் : யாழ். மறைமாவட்ட தொடர்பு சாதன ஆணைக்குழுவின் இயக்குநர் என்ற வகையில் கத்தோலிக்க நிகழ்வுகள் பலவற்றை யாழ். சேவை மூலமாக ஒலிபரப்புச் செய்தோம். சாட்டி சிந்தாத்திரை மாதா யாத்திரைத்தலம், பாசையூர் புனித அந்தோனியார் ஆலயம், யாழ். புனித மரியன்னை பேராலயம் ஆகிய ஆலயங்களின் சிறப்புத் திருப்பலிகளை ஆண்டுதோறும் வானொலியில் ஒலிபரப்பி வருகிறோம். கிறிஸ்மஸ் காலங்களில் கிறிஸ்மஸ் நிகழ்ச்சிகளையும், வேறு நிகழ்வுகளையும் ஒலிபரப்பி வருவதோடு, இசை ஒலிநாடா ஒன்றினையும், சிந்தனை ஒலிநாடா ஒன்றினையும் வெளியிட்டுள்ளோம்.

பத்திரிகைகளில் கத்தோலிக்க நறசிந்தனைகள், தவக்கால சிந்தனைகள், ஞாயிறு சிந்தனைகள் மற்றும் விசேட கத்தோலிக்க செய்திகள் என்பவற்றையும் சம்பந்தப்பட்ட பத்திரிகைகளோடு தொடர்பு கொண்டு வெளியிட்டு வருகின்றோம்.

யாழ். நகர் தமிழ் பத்திரிகைகளில் மட்டுமல்ல கொழும்புத் தமிழ் பத்திரிகைகளிலும் இவ்வொழுங்கினை மேற்கொண்டு வருகின்றோம். எல்லா பத்திரிகை ஆசிரியர்களும் எம்மோடு ஒத்துழைத்து உதவி வழங்கி வருவதை சிறப்பாகப் பாராட்ட விரும்புகிறோம். ⌘

## தீவகத்தில் நடந்த விபத்துகளில் மூவர் காயமுற்று ஆஸ்பத்திரியில்!

(யாழ்ப்பாணம்)

வேலணைப் பகுதியில் மோட்டார் சைக்கிளும் - சைக்கிளும் விபத்துக்குள்ளானதில் படுகாயமடைந்த இளைஞர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வேலணைச் சந்தியில் நடைபெற்ற இந்த விபத்தில், புன்னாலைக் கட்டுவன் வடக்கைச் சேர்ந்த சிவசுப்பிரமணியம் ரஜனிகாந் (வயது 25) என்பவரே படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

அதேவேளை, கடந்த 9 ஆம் திகதி ஊர்காவற்துறையில் நடைபெற்ற விபத்து ஒன்றில் மெலிஞ்சிமுனையைச் சேர்ந்த பிரகாசம் ஜோன் பிள்ளை (வயது 57), அருளானந்தம் சேவியர் (வயது 57) ஆகிய இருவரும் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (60,ச)

### வழக்கு ஒத்திவைப்பு

இந்தியாவில் தடைசெய்யப்பட்ட விடுதலைப்புலிகள் அமைப்பிற்கு ஆதரவாகச் செயற்பட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு பொடா சட்டத்தின் கீழ் கைதான வை.கோபாலசாமி மற்றும் எட்டுப்பேருக்கு எதிரான வழக்கு விசாரணை பெப்ரவரி 28 ஆம் திகதி வரை பொடா நீதிமன்றால் ஒத்திவைக்கப்பட்டுளளது.

### சாயி நிலையத்தில் போயாதின நிகழ்வு

யாழ்பகவான் ஸ்ரீசத்தியசாயி சேவா நிலையத்தினால் நடாத்தப்படும் போயாதின நிகழ்வு எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை அதிகாலை 5 மணிக்கு நகர சங்கீர்த்தனத்துடன் ஆரம்பமாகி நண்பகல் நாராயண சேவையுடன் நிறைவு பெறும். (ச)

### சாயி நிலையத்தில் வீடியோ காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சத்திய சாயி சேவா நிலையம் நடாத்தும் இலவச வீடியோ படக்காட்சி இன்று பிற்பகல 3.15 மணிக்குத் திருநெல்வேலியில் அமைந்துள்ள சாயி சேவா நிலையத்தில் நடைபெறும்.

திருவண்ணாமலை திருக்காட்சி, மீனாட்சி அம்மன் அருட்காட்சி, ரமண மகிஷி மலையை வலம்வரும் காடசி அடங்கிய வீடியோப்படக் காட்சி நடைபெறும்.

### விபத்தில் காயம்

(கொழும்புத்துறை)

மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளானதில் அதில் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் காயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் உடுவில் சந்திக்கு அண்மையில் இடம்பெற்ற இவ் விபத்தில், உடுவிலைச் சேர்ந்த நவநேசகுமார் (வயது 30) என்பவரே காயமடைந்தவராவார். (60)

## மீனவர் பிரச்சினைகள் பற்றி பிரதமருடன் பேசுவோம்!

### கஜேந்திரகுமார் எம்.பி குருநகரில் தெரிவிப்பு

யாழ்.கரையோர மீனவர்கள் அனுபவிக்கும் பிரச்சினைகள் தொடர்பாகப் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவுடன் பேசவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

குருநகரில் சீநோர் தொழிற்சாலைக்கு அருகில் புதிதாகப் புனரமைக்கப்பட்ட மீன்சந்தைக்குச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் மற்றும் சி.வி.கே.சிவஞானம் ஆகியோர் அங்குள்ள மீனவர்களுடன் கலந்துரையாடினர்

இதன்போது மீனவர்கள் - படையினர் அண்மையில் நெடுந்தீவில் நடைபெற்ற சம்பவத்தையடுத்துக் கடும்போக்கைக் கடைப்பிடிக்கின்றார்கள் என்றும், தற்போது படையினர் சோதனைகளை அதிகரித்திருப்பதாகவும் தெரிவித்தனர்.

இதற்குப் பதிலளிக்கையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போது மீனவர்கள் அனுபவிக்கும் பிரச்சினைகளை நாம் உரிய தரப்பினருடன் கதைத்துத் தீர்க்க நடவடிக்கை எடுக்கவுள்ளோம். இவ்விவகாரம் தொடர்பாக வெகுவிரைவில் பிரதமரின் கவனத்திற்குக் கொண்டுசெல்லப்படும் எனத் தெரிவித்தார்.

பின்னர் குருநகர்ப் பகுதி படையதிகாரிகளுடன் கலந்துரையாடிய நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் - மீனவர்கள் கடலிலிருந்து வீடு திரும்பும்போது மீனவர்களை சோதனையிடுவதைத் தவிர்க்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

இதைக் கொள்கையளவில் ஏற்றுக்கொண்ட படையதிகாரி - தாம் தமது சோதனைகளை விரைவில் குறைக்கத் தீர்மானித்துள்ளதாகத் தெரிவித்தார். (லி)

ICC Cricket World Cup South Africa 2003





# ஐ.சி.சி. உலகக் கிண்ணம் - 2003




# இந்திய அணிக்கு ஊக்க மாத்திரை...!

கடந்த மாதங்களில் சொந்த நாட்டிலே மேற்கிந்தியத் தீவுகள் அணியுடனும், நியூசிலாந்தில் அந்த அணியுடனும் விளையாடிய இந்திய அணி, ஆட்டத்தொடரினை வெல்ல முடியாமல்போனது சற்றுப் பின்னடைவுதான். ஆனால், இப்போது இந்திய அணிக்கு ஊக்க மாத்திரை கொடுத்தாற்போல் உலகக்கிண்ணப் போட்டியில் முதன் முதலில் கங்குலியின் தலைமையில் நெதர்லாந்துடன் விளையாட இனிப்பான சந்தர்ப்பம் இன்று பார்ல் நகரில் கிடைத்துள்ளது.



பங்கர், ட்ராவிட் படைப்பார்களா சரித்திரம்...?

அண்மையில் பிறந்த நெதர்லாந்து அணியுடன் முன்னாள் உலகக்கிண்ண அணி மோதுகிறது. இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடினால் ஒரு முன்னூறைத் தாண்ட வேண்டும். அவ்வாறு செய்தால்தான் தொடர்ந்தும் கௌரவத்தைத் தக்கவைத்துக்கொள்ள முடியும். ஷேவாக்கும், கங்குலியும் சேர்ந்து ஆட்டத்தை முடிக்கப் போகிறார்களா? அல்லது ஷாஹீர்கானிடமும் நெஹ்ராவிடமும் துடுப்பாட்டப் பொறுப்பைக் கொடுக்கப் போகிறார்களா...?

**வீ.ஏ.கோவி**

11,000 ஓட்டங்களைக் கடந்த நாயகனும் இருக்கிறார் அல்லவா? வாணவேடிக்கைதான். நெதர்லாந்து அணிக்கு களத்தடுப்பு தேவையில்லை. பந்துகளை எல்லைக்கப்பால் இருந்து எடுத்துக் கொடுத்தால் போதும்.

ஆனாலும், நெதர்லாந்து அணியை இவ்வளவிற்கு குறைவாக எடை போடுவது தவறுதான். ஏனெனில், அண்மையில் நடந்த சில போட்டிகளில் அந்த அணியும் குறைகூறும்படி இல்லாமல் திறமையாகச் செய்துள்ளது.

அனுபவமும் திறமையும் கொண்ட தலைவரான பிலிப் லெ.ஃவபரும், அதிரடியாக ஆடக்கூடிய வீரர்களும் நெதர்லாந்து அணிக்கு உள்வாங்கப்பட்டுள்ளதால், இந்திய அணி கவனயீனமாக விளையாடி தோல்வியின் விளிம்பைச் சந்தித்து, கௌரவத்தை இழக்காமல் விழிப்பு டன்தான் செயற்பட வேண்டும்.



சச்சின் - தொடங்கட்டும் கணக்கு.

எது எப்படியோ இன்றைய ஆட்டத்தில் இந்திய அணி முன்னூற்று இருபத்தைந்தைக் கடந்து வெற்றியீட்டும். அல்லது 30 ஓவர்களுக்குள் ஒன்பது விக்கெட்டுக்களால் வெற்றிவாகை சூடும் என்றும், 'சொல்லி அடிப்பானடி (ஷேவாக்), அடிச்சானெண்டால் சிக்ஸரும் பவுண்டரிகளும் தானடி....' என்றும் இரசிகர்கள் சிலரின் மனம் பேசிக்கொள்வதைக் காதுகொடுத்துக் கேட்கக் கூடியதாய் உள்ளது உண்மையா...? இன்று விடை கிடைக்கட்டுமே!

# 2 ஆம் நாள் 3 சதம்



ஸ்கொட் ஸ்டைரிஸ்

இலங்கை நியூசிலாந்தை வென்றதென்னவோ உண்மைதான். ஆனால், 272 ஓட்டங்களில் சனத்தும் ஹசானும் பெற்றது 201 ஓட்டங்கள்.ஏனைய ஏழு துடுப்பாட்ட வீரர்கள் பெற்றது மொத்தம் 53. ஆனால், உண்மையில் மனதைக் கவர்ந்தது ஸ்டைரிஸ் குவித்த 141 ஓட்டங்கள்தான். ஒரு அழுத்தமான சூழ்நிலையில் அவர் போட்ட சதம் அது, 225 ஓட்டங்களில் அவர் பங்கு பெரிது.



கிரெய்க் விஷாட்

இன்னொரு ஆட்டத்தில் நமீபியாவை சிம்பாப்வே வென்றது. இந்த ஆட்டத்தின் சிறப்பு, சிம்பாப்வே ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் விஷாட் ஆட்டமிழக்காமல் பெற்ற 172 ஓட்டங்கள். இதில் மூன்று சிக்ஸர், 18 பவுண்டரிகள் அடக்கம் . என்னவோ ஒவ்வொரு ஆட்டமும் சதம் காண்கிறது. எங்களுக்கும் தேவை அதுதானே.

-மயூரன்-

# அதிர்ச்சியும் வேதனையும் அடங்காது

இங்கிலாந்தின் ஹம்ப்ஷயர் அணிக்கு அடுத்த இரண்டு வருடங்களுக்கு அணித் தலைவர்,1999 உலகக்கிண்ண இறுதிப் போட்டியில் MAN OF THE MATCH, 20 ஆம் நூற்றாண்டின் அதிசிறந்த கிரிக்கெட் வீரர்களுள் ஒருவர். அவர்தான் ஷேன் வோர்ன. நேற்று ஓர் அதிர்ச்சிச் செய்தி. ஊக்க மருந்துப்பாவனை நிரூபிக்கப்பட்டதன் பேரில் அவர் அணியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார். வேறுசில ஊக்க மருந்துகளின் பாவனையை மறைக்கும் மற்றும் உடலின் எடையைக் குறைக்கும் DIURETIC எனும் மருந்தை உட்கொண்டதாக அவர் நிரூபிக்கப்பட்டுள்ளார். "நான் பெரும் அதிர்ச்சியடைந்தேன். நான் ஊக்க மருந்து எதையும் பாவிக்கவில்லை" என்று கூறுகிறார் வோர்ன். உலகக் கிண்ணப் போட்டிகளே எனது ஒரு நாள் வாழ்வின் இறுதிப் போட்டிகளாக இருக்கும் என்றவர் அவர்.



சோகத்துடன் ஷேன் வோர்ன்

ஆனால், முதலாவது போட்டி தொடங்கும் நாளிலேயே மிகவேதனையுடன் தாயகம் நோக்கிப் புறப்பட்டிருக்கிறார். 2003 உலகக்கிண்ணப் போட்டிகளின் பாரிய அதிர்ச்சிச் செய்தியிது. ஏனெனில், ரசிகர்கள் மத்தியில் வோர்ன் பற்றிய எதிர்பார்ப்பு நிறையவே இருந்தது. இந்நிலையில் இவருக்குப் பதிலாக இன்னொரு LEG SPINNER அணிக்குள் வரும் சாத்தியம் இருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. ஸ்ருவட் மக்கில் அல்லது கமரன் வைட் ஆக அது இருக்கக்கூடும் என்று கருதப்படுகிறது. இனி அணியின் சுழற்பந்து வீச்சாளருக்கான தலைமைப் பொறுப்பை ஏற்பவர் BRAD HOGG.



எங்கே போனது கம்பீரம்?

**ஆர்.ரி.லோஜன்**

எது எவ்வாறாயினும், ஷேன் வோர்ன் எனும் அற்புதமான கிரிக்கெட் வீரனின் எதிர்காலம் எவ்வாறு அமையப் போகின்றது என்பது ஒரு கேள்விக் குறிதான். உலகக் கிண்ணப் போட்டிகளில் ஷேன் வோர்ன் இல்லை என்பது மிகுந்த வெறுமையைக் காட்டிநிற்கும் என்பது உண்மை.

## நேற்றைய அவுஸ்திரேலிய - பாகிஸ்தான் ஆட்டத்திலிருந்து...




மார்ட்டினை பூச்சியத்தில் சரித்த மகிழ்ச்சியில் அக்ரம்.




விளாசித்தள்ளிய சிமண்ட்ஸ் ஹார்வியின் அணைப்பில்.




கிரிக்கெட் ரசிகர்கள் ஷேன் வோர்னை ஒரு குற்றவாளியாகப் பார்க்கத் தயாரில்லை.
அவர்களைப் பொறுத்தவரை வோர்ன் - ஒரு தளராத சிங்கமேதான்.
வோர்ன், அவுஸ்திரேலியா திரும்பினாலும் தளராது விளையாடி வென்ற அவரது அணி மனக்காயத்தை சிறிது மாற்றச் செய்துவிட்டது.

பாகிஸ்தானின் 49 ஆவது ஓவரில் முதல் மூன்று பந்துகளிலும் இரண்டு பௌண்சர்களை வீசிய அணித் தலைவர் வக்கார் யூனுஸ், நடுவர் டேவிட் ஷெப்பர்ட்டினால் கண்டிக்கப்படுகிறார். அதுமட்டுமல்ல அந்த ஓவரின் இறுதி மூன்று பந்துகளும் வக்காரிடமிருந்து அகற்றப்பட்டு அப்ரீடியிடம் கொடுக்கப்பட்டன.



## நாளும் ஒரு வினா

**2003 உலகக் கிண்ணப் போட்டிகளில் முதல் சதம் அடித்தவர் யார்?**

**பிறைன் லாரா (மேற்கிந்தியத் தீவுகள்)**

# உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003

**அவுஸ்திரேலிய அணி எதிர் பாகிஸ்தான் அணி**

**அவுஸ்திரேலிய அணி**

| வீரர்கள் | ஓட்டங்கள் | பந்துகள் | நான்குகள் | ஆறுகள் |
|---|---|---|---|---|
| கில்கிறிஸ்ட் | 01 | 03 | 0 | 0 |
| ஹேடன் | 27 | 41 | 3 | 0 |
| பொண்டிங் | 53 | 67 | 7 | 0 |
| மாட்டின் | 0 | 1 | 0 | 0 |
| மேஹர் | 9 | 19 | 1 | 0 |
| சிமண்ட்ஸ் | 143 | 125 | 18 | 2 |
| ஹொக் | 14 | 22 | 0 | 0 |
| ஹார்வி | 24 | 19 | 3 | 0 |
| பிரெட் லீ | 2 | 6 | 0 | 0 |
| ஜிலெஸ்பி | 6 | 4 | 1 | 0 |
| உதிரிகள் | 31 | | | |

மொத்தம் 50 ஓவர்களில் 8 விக்கெட் இழப்புக்கு - 310

**பாகிஸ்தான் அணி**

| வீரர்கள் | ஓட்டங்கள் | பந்துகள் | நான்குகள் | ஆறுகள் |
|---|---|---|---|---|
| த.ஃபீக் உமர் | 21 | 43 | 4 | 0 |
| அப்ரீடி | 01 | 08 | 0 | 0 |
| சலீம் எலாஹி | 30 | 40 | 3 | 0 |
| இன்சமாம் | 06 | 13 | 1 | 0 |
| யொகானா | 27 | 37 | 4 | 0 |
| யூனிஸ் கான் | 19 | 28 | 0 | 0 |
| அப்துர் றஸாக் | 25 | 33 | 2 | 0 |
| ரஸீக் லத்தீவ் | 33 | 23 | 1 | 3 |
| வசீம் அக்ரம் | 33 | 31 | 4 | 1 |
| வக்கார் யூனிஸ் | 6 | 11 | 0 | 0 |
| சோஹெய்ப் அக்தார் | 0 | 5 | 0 | 0 |
| உதிரிகள் | 27 | | | |

மொத்தம் 44.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களும் இழந்து-228.

**பந்து வீச்சு -பாகிஸ்தான் அணி**

| வீரர்கள் | ஓவர் | கன்னி ஓவர் | ஓட்டங்கள் | விக்கெட்டுக்கள் |
|---|---|---|---|---|
| அக்ரம் | 10 | 0 | 64 | 3 |
| அக்தார் | 10 | 0 | 45 | 2 |
| வக்கார் | 8.3 | 1 | 50 | 2 |
| அப்துர் றஸாக் | 06 | 0 | 42 | 0 |
| அப்ரீடி | 9.3 | 0 | 63 | 0 |
| யூனிஸ் கான் | 06 | 0 | 36 | 0 |

*நடுவர்கள்* : அசோகா டீ சில்வா, டேவிட் ஷெப்பர்ட்
*மைதானம்* : ஜோஹனஸ்பேர்க்

**பந்து வீச்சு - அவுஸ்திரேலிய அணி**

| | | | | |
|---|---|---|---|---|
| மக்ரா | 10 | 2 | 39 | 1 |
| ஜிலெஸ்பி | 08 | 1 | 28 | 1 |
| பிரெட் லீ | 07 | 0 | 37 | 1 |
| ஹார்வி | 9.3 | 0 | 58 | 4 |
| ஹொக் | 10 | 0 | 54 | 3 |

உலகக் கிண்ண கிரிக்கெட் - 2003 இல் நேற்று மூன்றாவது நாள் போட்டியில் பாகிஸ்தான் அணியை 82 ஓட்டங்களால் அவுஸ்திரேலியா வென்றது.

*ஆட்டத்தின் சிறப்பாட்டக்காரர் - அன்ரூ சிமண்ட்ஸ்*

*அவுஸ்திரேலியா பெற்ற புள்ளிகள் - 04*

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# நாட்டின் பாதுகாப்பு முப்படையினரிடமே

## புலிகளுக்கு தெரியப்படுத்தப்பட்டிருப்பதாக பீரிஸ்

நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும் அதிகாரம் முப்படையினருக்கே உரியதென்பதை விடுதலைப்புலிகளிடம் தெளிவாகக் கூறியதாக பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

பேர்ளின் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொண்ட பின் நேற்று நாடு திரும்பியதன் பின்னர், ஊடகம் ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 7 ஆம்,8 ஆம் திகதிகளில் நடைபெற்ற பேச்சுவார்த்தை வெற்றிகரமாக அமைந்தது என்றும் பேராசிரியர் பீரிஸ் குறிப்பிட்டார்.

நாட்டைத் துண்டாடாது அதிகாரப் பகிர்வை எவ்வாறு மேற்கொள்வது என்பது குறித்தும் மத்திய அரசுக்கும் பிராந்தியங்களுக்கிடையிலான நிதிச் செயற்பாடுகள் குறித்தும் ஜப்பானில் கலந்துரையாடத் தீமானித்திருப்பதாக ஜி.எல். பீரிஸ் அந்த ஊடகத்துக்கு மேலும் தெரிவித்தார்.

# கூட்டணி அரசு அமைக்க ஐ.தே.க. அழைத்துள்ளதாம்

## சரத் அமுனுகம தெரிவிப்பு

கூட்டணி அரசாங்கம் ஒன்றை அமைக்க பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு ஐக்கிய தேசியக் கட்சி உத்தியோகபூர்வமாக தகவல் அனுப்பியுள்ளதாக, பொ.ஐ.முவின் ஊடகப் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

அமைக்கப்படும் கூட்டணி அரசாங்கத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு இருபது அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் பதவிகளும், ஐக்கிய தேசியக்கட்சிக்கு இருபது அமைச்சரவை பொறுப்புக்கள் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கலகெதர அமைப்பாளராகிய பின்னர் நடந்த கூட்டத்தில் உரையாற்றும் போது சரத் அமுனுகம இதனைத் தெரிவித்தார்.

அடுத்துவரும் பொதுத்தேர்தலில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்தி இணைந்து செயற்படுவது தொடர்பாக கடந்த வியாழக்கிழமை மக்கள் விடுதலை முன்னணியுடன் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### கருணா நிலையம் மீண்டும் இயக்கம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கருணா நிலையம் மீண்டும் இன்றுமுதல் செயற்பட ஆரம்பிக்கிறது.

இராணுவ நடவடிக்கை காரணமாக சேதத்துக்குள்ளாகிய இந்த நிலையம் மீண்டும் புனரமைக்கப்பட்டு இன்று முதல் தனது சேவையை ஆரம்பிக்கிறது. வண.பிதா.நேசகுமார் வைபவரீதியாக இந்த நிலையத்தை ஆரம்பித்து வைக்கவுள்ளார். (க)

## மிருசுவில் படுகொலை வழக்கு

# படையினர் உரிய நேரத்தில் நீதிமன்றில் ஆஜராகவில்லை

(கொழும்பு)

மிருசுவில் படுகொலை தொடர்பான வழக்கு விசாரணை நேற்று ட்ரயல் அட்பார் முறையில் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் ஆரம்பமாகியது.

இந்த வழக்கின் எதிரிகளாக ஐந்து இராணுவத்தினரை சிறைச்சாலை அதிகாரிகள் உரிய நேரத்தில் நீதிமன்றில் ஆஜர் செய்யத் தவறியமை குறித்து, வழக்கு விசாரணையை மேற்கொண்ட நீதிபதிகள் குழு தமது அதிருப்தியை தெரிவித்துள்ளது.

வழக்கின் பிரதான சாட்சியான பொன்னுத்துரை மகேஸ்வரன் சாட்சியமளித்தார். இவர் மிருசுவிலில் இடம்பெற்ற படுகொலைச் சம்பவத்தின்போது உயிர் தப்பியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கடற்புலி மேஜர் ஆற்றலோனுக்கு தென்மராட்சியில் அஞ்சலி நிகழ்வு

(மீசாலை)

நெடுந்தீவுக் கடற்பரப்பில் கடற்படையினர் முற்றுகைக்குள்ளாகி வீரமரணமடைந்த கடற்புலி மேஜர் ஆற்றலோனின் அஞ்சலி நிகழ்வு நேற்று தென்மராட்சியில் நடைபெற்றது.

நெடுந்தீவுக் கடற்பரப்பில் கடற்படையினரின் முற்றுகைக்குள்ளான சம்பவத்தில் மூன்று கடற்புலிகள் வீரச்சாவடைந்தனர்.

இவர்களில் மேஜர் ஆற்றலோன் (சுதன்) என அழைக்கப்படும் கிருஷ்ணசாமி சதீஸ்வரனின் திருவுருவப்படம் பிற்பகல் 1.30 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து பாண்ட் வாத்தியங்கள் இசைக்க - பெருமளவான போராளிகள், பொதுமக்கள் சூழ - அலங்கரிக்கப்பட்ட ஊர்தி மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்தைச் சென்றடைந்தது.

அங்கு தென்மராட்சி அரசியல் துறையைச் சேர்ந்த எஸ்.சிறிநாத் தலைமையில் அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது.

கடற்புலிகளின் மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் கல்யாணி பொதுச் சுடரினை ஏற்ற, மாவீரரின் பெற்றோர் அவரின் திருவுருவப்படத்திற்கு ஈகச் சுடரினை ஏற்றினார்கள்.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி மற்றும் கல்வித்திணைக்கள அதிகாரிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், போராளிகள் அஞ்சலி உரை நிகழ்த்தினர். தொடர்ந்து போராளிகளும் பொதுமக்களும் மாணவர்களும் மலர் அஞ்சலி செலுத்தினர்.

மாவீரரின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்தி, 4.15 மணிக்கு கண்டி வீதி ஊடாக, கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்தை சென்றடைந்தது.

மேஜர் ஆற்றோனின் நினைவுக்கல் அவரது பெற்றோரால் திரைநீக்கம் செய்யப்பட்டது. (25)

# யாழ். பல்கலைக்கழகத்தில் பிரெஞ்சு கற்கை நெறி அமைச்சரிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

பிரெஞ்சு மொழிக கற்கைநெறியை யாழ்.பல்கலைக்கழகத்தில் ஆரம்பிப்பதற்கு உதவும்படி பிரான்ஸ் பிரதி வெளிவிவகார அமைச்சரிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

நேற்று யாழ்.விஜயம் செய்த பிரான்ஸ் நாட்டின் பிரதி வெளிவிவகார அமைச்சர் றேனோ முசாலியருடனான சந்திப்பின்போது, மேற்படி கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளையே மேற்படி கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

மேற்படி கற்கை நெறியை ஆரம்பிப்பதற்கு விரிவுரையாளர்களையும், தேவையான நிதி உதவியையும் வழங்கும்படியும் துணைவேந்தர் மேலும் கோரினார்.

மேற்படி கோரிக்கையை ஏற்றுக் கொண்ட பிரெஞ்சு பிரதி வெளிவிவகார அமைச்சர் முசாலியர், உதவிகளை வழங்குவது குறித்து தாம் சாதகமாகப் பரிசீலிக்க இருப்பதாகத் தெரிவித்தார்.

## கௌரவிப்பு விழா

நல்லூர் லயன்ஸ் கழகத்தின் மாவட்ட ஆளுநர் கௌரவிப்பு விழா இன்று மாலை 6 மணிக்கு லயன் கே.அருள் நேசன் இல்லத்தில் நடைபெறவுள்ளது.

தமிழ்நாட்டிலிருந்து வந்திருக்கும் - லயன் வி.ரி.பாரதி, லயன் பி.தண்டாயுதபாணி, லயன் எஸ்.ரி.வாசன், லயன் ஆர். சுவாமிநாதன் ஆகியோர் கௌரவிக்கப்படவிருக்கின்றனர்.

இந்நிகழ்வில், 304 பி பிராந்தியம் இரண்டின் தலைவர் லயன் ஜெயலத் சலரும், மாவட்ட இணைப்பாளர் லயன் மரியதாஸும் கலந்துகொள்ளவுள்ளனர். (ச)

# பேர்ளின் கடும் குளிரில் அமைச்சர்கள் தூக்கமா?

## கேள்வி எழுப்புகிறது ஜே.வி.பி

விடுதலைப் புலிகள் தமது படகுகளில் ஆயுதங்கள் கடத்திவரும் சமயத்தில் பேர்ளின் சமாதானப் பேச்சில் கலந்துகொண்ட அரசின் அமைச்சர்கள் ஜி.எல்.பீரிஸ், மிலிந்த மொறகொட, ஹக்கீம் ஆகியோர் ஜேர்மனியின் குளிரான காலநிலையில் நல்ல தூக்கத்தில் இருந்தனரா? எனக் கண்டனம் தெரிவித்து ஜே.வி.பி. பத்திரிகை அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

நெடுந்தீவு சம்பவம் குறித்து செய்திகள் வெளியாவதை பிரதமரும், பாதுகாப்பு அமைச்சரும் தடுத்து வருகின்றனர் எனவும் ஜே.வி.பி குற்றஞ்சாட்டியுள்ளது

# தெளிவற்ற...

புதிய சந்தேகம் ஒன்று தோன்றியுள்ளது. எந்த திகதிக்குப் பின்னர் மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு இக்கொடுப்பனவை வழங்குவது என்பதுவே அந்தச் சந்தேகம். அமைச்சரவைத் தீர்மானத்தில் மேற்படி திகதி எதுவும் குறிப்பிடவில்லை என்றும், குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் மீள்குடியமர்ந்த குடும்பங்களுக்கே இக்கொடுப்பனவு வழங்கலாம் என்று காலவரையறை ஒன்று தெளிவாகத் தமக்கு தெரிவிக்கப்பட வேண்டும் என்றும் மாகாணசபை அதிகாரிகள் எதிர்பார்க்கின்றனர்.

இவ்விடயம் குறித்து மாகாண சபையின் பிரதம செயலர், பிரதம மந்திரிக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்திருக்கிறார். இக்கடிதத்துக்கு இதுவரை பதில் எதுவும் கிடைக்கவில்லை. இதனால் மேற்படி கொடுப்பனவு வழங்கப்படுவது காலதாமதப்படுத்தப்பட்டு வருகிறது.

மேற்படி திகதியைத் தீர்மானிப்பதற்கு, மீண்டும் அமைச்சரவைக்கு இவ்விடயம் சமர்ப்பிக்கப்பட வேண்டுமா அல்லது இவ்விடயத்தைக் கவனத்தில் எடுக்காமல் கொடுப்பனவை மேற்கொள்ள முடியுமா என்பது குறித்து பிரதமர் அலுவலகத்தில் இருந்து தெளிவான பதில் வரும்வரை மாகாணசபை அதிகாரிகள் காத்திருக்கின்றனர் எனத் தெரியவருகின்றது.

## அமைதி...

களை விடுப்பது குறித்து மக்கள் ஏமாற்றத்துக்குள்ளாகி இருக்கிறார்கள். ஜனாதிபதி சுதந்திரதின உரையில் சமாதானப் பேச்சுக்களைப் பாராட்டினார். ஆனால், அதன்பின்னர் பொதுக்கூட்டம் ஒன்றில் பேச்சுக்களை ஏளனம் செய்துள்ளார். நாட்டில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பொறுப்பற்ற முறையில் நடந்து கொள்கிறார் என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# அவசர நூலகத் திறப்பு ரவிராஜும் காரணம்

## அமைசர் மகேஸ்வரன் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்.நூலகத்தை அவசரமாக திறப்பதில் ரவிராஜ் எம்.பியும் மறைமுகமாக நின்று உழைப்பதாக இந்துசமய விவகார அமைச்சர் தி.மகேஸ்வரன் தனது அறிக்கையொன்றில் குற்றஞ்சாட்டியுள்ளார்.

ரவிராஜ் தன் உறவினரான சிவில் பொறியியலாளர் ஒருவர் மூலம் திறப்பு விழாவுக்கான வேலைகளை செய்து வருகிறார்.

- என அமைச்சர் மகேஸ்வரனது அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# யாழ்.நகரின் பல பகுதிகளுக்கும்...

பின்னர், புதிதாக புனரமைக்கப்பட்ட யாழ்.பொது நூலகத்தையும் மேற்படி குழுவினர் சென்று பார்வையிட்டனர்.

11 மணியளவில் யாழ்.போதனா வைத்தியசாலைக்குச் சென்ற பிரெஞ்சு குழுவினர் - அங்கு வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சதுர்முகனுடன் கலந்துரையாடல் நடாத்தினா.

இதன்போது யாழ். போதனா வைத்தியசாலையை புனரமைக்கும் முகமாகத் தயாரிக்கப்பட்ட மாதிரி திட்ட வரைபடத்தையும் அவர்கள் பார்வையிட்டனர். இத்திட்டத்தின்படி போதனா வைத்தியசாலையை புனரமைக்க பிரான்ஸ் நாடு நிதியுதவி வழங்க வேண்டுமென, வைத்தியசாலை நிர்வாகத்தினர் பிரெஞ்சுக் குழுவினரைக் கேட்டுக் கொண்டனர். பின்னர் யாழ். போதனா வைத்தியசாலையை பிரெஞ்சு குழுவினர் சுற்றிப்பார்வையிட்டனர்.

நண்பகல் 12 மணியளவில் யாழ்.போதனா வைத்தியசாலையிலிருந்து அல்லைப்பிட்டிக்குச் சென்ற தூதுக்குழுவினர் - அங்கு பிரான்ஸ் நாட்டின் உதவியுடன் அமைக்கப்படவுள்ள வீட்டுத் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டினர். இதில் கலந்து கொண்ட யாழ்.ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, பிரான்ஸ் தூதுக்குழுவினரை வரவேற்று அவர்களுடன் கலந்துரையாடினார்.

பிரான்ஸ் பிரதி வெளியுறவு அமைச்சரின் தலைமையிலான குழுவினரின் இவ்விஜயத்தின்போது அமைச்சர் ஜயலத் ஜெயவர்த்தனா, யாழ்.அரசாங்க அதிபர் பத்மநாதன், மேலதிக அரசாங்க அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல் மற்றும் யாழ்.இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா, யாழ்.மாவட்ட இராணுவ பிரதிக் கட்டளைத் தளபதி ரட்ணசபாபதி மற்றும் பிரிகேடியர் ரி.ரி.சில்வா ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இதேசமயம், பிரான்ஸ் நாட்டின் உதவியுடன், கரித்தாஸ் நிறுவனம் - வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் மக்களிற்கு வீடுகள் கட்டிக் கொடுக்கும் பணியை ஆரம்பிக்கவுள்ளது. பிரான்ஸ் நாடு இதற்காக ஏறத்தாழ 250 வீடுகளின் கட்டுமானப்பணிக்காக இருபது மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கியுள்ளது. இந்நிதியில் அல்லைப்பிட்டியில் 85 வீடுகளும், மண்டைதீவில் 40 வீடுகளும், வேலணை, ஊர்காவற்றுறை ஆகிய இடங்களில் மிகுதி வீடுகளும் அமைக்கப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது.

ஒரு வீட்டிற்கு 50 ஆயிரம் ரூபா என்ற ரீதியில் ஒதுக்கப்பட்டு, மிகவும் வறுமைக்கோட்டிற்கு கீழ்வாழும் மக்களைத் தெரிவு செய்து அவர்களுக்கே இவ்வீடுகள் கட்டிக்கொடுக்கப்படவுள்ளன. (ரா.வி.60)

# நூல்நிலையம்....

நூலக ஊழியர்களை நியமிக்க திறைசேரி இன்னும் அனுமதி வழங்கவில்லை, தேநீர்ச்சாலை, மலசலகூட வசதிகள் முழுமையாக்கப்படவில்லை. இந்நிலையில், அவசர அவசரமாக நூல் நிலையம் திறக்கப்படுவதானது வெறும் கட்டடத்தைத் திறப்பதற்குச் சமமானது என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, புனரமைப்புப் பணிகள் நிறைவடையாமல், யாழ். பொது நூலகத்தைத் திறப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும், பொது நூலகத் திறப்புவிழாவை பிற்போடுமாறு கோரியும் நாளைமறுதினம் யாழ்ப்பாணத்தில் முழுக் கதவடைப்பும் மறியல் போராட்டமும் நடாத்த நேற்று நடைபெற்ற பொதுஅமைபபுக் களின் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 12.02.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.